## பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

| | |
|---|---|
| 01.11.2016 | அனைத்து புனிதர்களின் நினைவு - திருப்பலி |
| 02.11.2016 | அனைத்து இறந்தோர்களின் நினைவு - திருப்பலி |
| 04.11.2016 | தூய சார்லஸ் பொரோமெயோ - திருப்பலி |
| 06.11.2016 | ஆண்டின் பொதுக்காலம் 32ம் ஞாயிறு - திருப்பலி |
| 09.11.2016 | இலாத்தரன் பேராலய நேர்ந்தளிப்பு திருவிழா - திருப்பலி |
| 10.11.2016 | திருத்தந்தை லியோ (சிங்கராயர்) - திருப்பலி |
| 13.11.2016 | ஆண்டின் பொதுக்காலம் 33ம் ஞாயிறு - திருப்பலி |
| 14.11.2016 | குழந்தைகள் தினவிழா - செபவழிபாடு |
| 15.11.2016 | தூய ஆல்பர்ட் - திருப்பலி |
| 18.11.2016 | தூய பேதுரு-பவுல் பேராலயங்கள் அர்ச்சிப்பு திருவிழா - திருப்பலி |
| 20.11.2016 | கிறிஸ்து அரசர் பெருவிழா (இறை இரக்க ஆண்டின் நிறைவு) - திருப்பலி |
| 21.11.2016 | மரியாள் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கப்பட்ட திருவிழா - திருப்பலி |
| 22.11.2016 | தூய செசிலியம்மாள் திருவிழா - திருப்பலி |
| 27.11.2016 | திருவருகைக் காலத்தின் முதல் ஞாயிறு - திருப்பலி |
| 30.11.2016 | தூய அந்திரேயா திருத்தூதர் - திருப்பலி |

## பகுதி 2: விசுவாசத்தில் வளர...

1. இறை இரக்க ஆண்டு நிறைவு - நமக்கு தரும் சவால்கள்
2. திருவருகைக் காலம் - தயாரிப்புக்களும் சவால்களும்
3. புனிதர்கள் பலவிதம் ஒவ்வொருவரும் ஒருவிதம்
4. இறந்தோர்க்காக செபிக்கும் ஆன்மீகம் - ஒரு புரிதல்
5. திருச்சபை செய்திகள்

## 01.11.2016 அனைத்து புனிதர்களின் நினைவு திருப்பலி

திருமதி. ராணி வில்சன்

**முன்னுரை**

இன்று திருஅவை அனைத்து புனிதர்கள் விழாவை கொண்டாட நம்மை அழைக்கிறது. ஏன் தெரியுமா? புனிதர்கள் அன்றாடம் தங்களின் உன்னத வாழ்வால் இந்த மேன்மையை அடைந்துள்ளனர். இதே மேன்மையை நாம் அடையவே. திருத்தூதர்கள், மறைசாட்சிகள், மறைப்பணியாளர்கள், துறவறத்தார்கள் மட்டுமல்ல பல இல்லறத்தார்களும் புனிதர்களாகியுள்ளனர். திருஅவை அறிவித்த சிலரும் உள்ளனர்.

இவர்கள் அனைவருமே நமக்கு முன்மாதிரியாக, எடுத்துக்காட்டாக வாழ்ந்துள்ளனர். அவர்களும் நம்மைப்போல் இம்மண்ணுலகில் பிறந்து சராசரியாக வாழ்ந்த மனிதர்கள்தான். திருமுழுக்கு பெற்ற நாம் ஒவ்வொருவரும் புனித வாழ்வு வாழ்வதும் புனிதராய் மாறுவதும் சாத்தியமே. இதற்கு தேவை எளிய உள்ளம், கடவுள் நம்பிக்கை மற்றும் அவரையே சார்ந்திருத்தல். கனிவுள்ளவராக, பக்தியுள்ளவராக, மற்றவருக்கு எல்லா நிலைகளிலும் பயன்படுபவராக நாம் வாழ வேண்டும். இன்று நாம் நினைவு கூறும் அனைத்து புனிதர்கள்போல் நம் வாழ்வும் உன்னத நிலைபெற இத்திருப்பலியில் இணைந்து மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. தாயும் தந்தையுமான இறைவா, எங்கள் திருஅவையின் இறை ஊழியர்கள் அனைவரும் இறையச்சத்தோடும் முழு நம்பிக்கையோடும் பணி வாழ்வில் பயணித்து நீதியின் நன்மக்களாக நலம் தரும் மருந்தாக அமைய உமது தூய ஆவியின் வல்லமையைப் பொழிந்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. உழைப்பை கற்றுக்கொடுத்த இறைவா, இன்று அநேகர் சோம்பித் திரிந்து உழைக்காமல் பிறர் உழைப்பை சுரண்டி வாழ்ந்து வருகின்றனர். மேலும் மதுவுக்கு அடிமையாகி தங்கள் வாழ்வை தாங்களே மாய்த்துக் கொள்கின்றனர். இது அநீதி என்பதை உணர்த்தி வாழ்வை மாற்றி மேம்படுத்திக்கொள்ள வரம் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

3. காலங்களை கடந்த இறைவா, இன்று எங்கள் அன்றாட நிகழ்வுகளில் பல செய்திகளை கேட்கிறோம், பார்க்கிறோம். அவற்றுள் எது உண்மை, பொய் என அறியாமல் எவற்றை நம்ப வேண்டும் என தெரியாமல் கலங்கி நிற்கிறோம். இவற்றில் ஏமாந்து போகாமல் இறை பற்றுறுதி கொண்டு துணிவோடு அனைத்தையும் மேற்கொள்ள வேண்டிய ஞானத்தையும் செயலாற்றும் வல்லமையையும் வழங்கிட வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

## 02.11.2016 அனைத்து இறந்தோர்களின் நினைவு திருப்பலி

திரு. இம்மானுவேல் ஜெயராஜ்

**முன்னுரை**

இறைத்தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பதுபோல் நாமும் இரக்கமுள்ளவராய் உலகிலுள்ள மக்கள் அனைவரின் மேலும் அன்பு செலுத்த வேண்டும் என்ற இரக்கத்தின் ஆண்டின் குறிக்கோளையும் தாண்டி உத்தரிக்கின்ற நிலையில் தாங்கள் செய்த பாவங்களுக்காக தண்டனை அனுபவிக்கும் ஆன்மாக்கள் நித்திய இளைப்பாற்றியடையவும் முடிவில்லா பேரின்பத்திலே அனைத்து புனிதர்களோடும் இணைந்து மூவொரு இறைவனின் அரசிலே பங்குபெற அவர்களின் பாவ மன்னிப்பிற்காக உலகில் வாழும் நாம் இறைவனிடம் பரிந்து பேசவும், அவர்களுக்காக செபிக்கவும், உதவிகள் செய்யவும், திருப்பலியினை சிறந்த முறையில் ஒப்புக்கொடுக்கவும், கத்தோலிக்க திருச்சபையினரான நாம் இந்நாளில் நம்முடன் வாழ்ந்து நம்மை விட்டுப்பிரிந்த அனைவருக்காகவும் யாரும் நினையாத ஆன்மாக்களின் இளைப்பாற்றிக்காக இத்திருப்பலியில் பக்தியுடன் பங்கேற்று இறைவன் நம் அனைவரையும் முடிவில்லா பேரின்பத்தில் இணைத்துக்கொள்ள வேண்டி இத்திருப்பலியில் பக்தியுடன் செபிப்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. இறை ஊழியத்திற்காக தங்களை அர்ப்பணித்திருந்த குருக்கள், கன்னியர்கள், துறவற சபையினர் அனைவரும் உத்தரிக்கின்ற நிலையில் இருப்பின் அவ்வாத்துமாக்கள் இறைவனின் மன்னிப்பைப் பெற்று விண்ணக வாழ்வில் இணைய வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. ஆள்கின்ற அதிகாரத்தில் இருந்து மனிதநேயமின்றி நடந்து, உலக செல்வங்களை சேர்க்கும் நோக்கில் உமது கட்டளைகளுக்கு எதிராக செய்த பாவங்களுக்கு பரிகாரம் பெறும் உத்தரிக்கின்ற ஆத்துமாக்கள் மோட்ச பேரின்பம் பெற வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. கத்தோலிக்க குடும்பங்கள் இறைவார்த்தை, திருப்பலி, ஒப்புரவு அருட்சாதனம் மற்றும் ஞானக் காரியங்களை ஊதாசினப்படுத்திவிட்டு இறைவனுக்கெதிராக செய்த பாவங்களின் பொருட்டு, உத்தரிக்கின்ற நிலையிலுள்ள ஆத்துமாக்கள் நித்திய பேரின்ப வாழ்வில் இணைக்கப்பெற வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. உலகில் யாவராலும் கைவிடப்பட்டவர்கள், இயேசுவை அறியாதவர்கள், பாவம் என்பது எத்தகைய தண்டனைகளை கொடுக்கும் என்ற ஞானமின்றி வாழ்ந்து உத்தரிக்கின்ற நிலையிலுள்ள அனைத்து ஆன்மாக்களும் விடுதலைப்பெற்று உமது அரசில் இடம்பெற வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**04.11.2016 தூய சார்லஸ் பொரோமெயோ திருப்பலி**

திருமதி. டிலைலா சேவியர்

**முன்னுரை**

கி.பி. 16வது நூற்றாண்டின் திருச்சபையின் மங்காத மாணிக்கமாகத் திகழ்ந்தவர் தூய சார்லஸ் பொரோமெயோ. இவரது காலத்தில் திருச்சபையில் பெரிய சீர்த்திருத்தங்கள் தேவைப்பட்டன. இவற்றைப் பெருமளவில் செயல்படுத்தி இவர் வெற்றிக் கண்டார். இவருக்கு அன்றைய நாட்களில் திருத்தந்தையாக இருந்த நான்காம் பத்திநாதருக்கு சங்கத்தை திறமையுடன் நடத்துவதற்குப் பெரிதும் உதவி புரிந்தார். தமது 27வது வயதிலிருந்து 46வயது வரை மிலான் நகர் ஆயராகப் பணியாற்றினார். ஸ்விஸ் நாட்டுக்குப் பயணமாகி பல பகுதி மக்களையும் சந்தித்து, கத்தோலிக்க விசுவாசத்தை மீண்டும் நிலைநாட்டினார். ஏழைகளுக்காக ஏராளமான பணத்தைச் செலவழித்தார். பிளேக் தொற்றுநோய் பரவிய நாட்களில் கடுமையாக உழைத்து தொண்டு புரிந்தார். இத்தகைய அரும்பெரும் முயற்சிகள் அவரது உடல் நிலையைப் பெரிதும் பாதிக்கவே தமது 46வது வயதில் காலமானார். இவர் எழுதிய நூல்களைத் தெளிவாகப் படித்து முடித்தப்பின் திருத்தந்தை 23ம் அருளப்பர் இவரை ஆயர்களுக்கு ஆசிரியர் என அழைத்தார்.

இப்புனிதரின் பொன்மொழிகள்:

1. ஒவ்வொரு நாளையும் புதிய ஆர்வத்துடன் செயல்படுத்த கடவுள் இன்னுமொரு நாளைக் கொடுத்து, பிறருக்கு நன்மைகள் பல செய்யும் உறுதியுடன் அந்த நாளைத்தொடங்குங்கள்.
2. எப்பொழுதும் கடவுளின் பிரசன்னத்தில் வாழ முயற்சி செய்யுங்கள்.
3. ஆன்மாவின்மீது அருட்சாதங்களை தகுந்த முறையில் நிறைவேற்றுவதில் அக்கறை செலுத்துங்கள்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. நல்லாயனாம் இறைவா, உமது மேய்ப்புப்பணியை தொடர்ந்து நிறைவேற்ற உம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள் அனைவருக்கும் உமது வல்லமையையும் கிருபையையும் என்றும் துணையாக தந்து தூய ஆவியின் துணையோடு திருச்சபையை வழிநடத்தும் அருளைத் தருமாறு உம்மை மன்றாடுகிறோம்.

2. நம்பிக்கையின் இருப்பிடமான இறைவா, இன்றைய நாட்களில் கத்தோலிக்க திருச்சபையின் மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் அவலநிலைகள், கொடுமைகள், சித்தரவதைகள் போன்ற இன்னல்களிலிருந்து காக்க வேண்டுமென்றும் இவர்களின் துன்ப நேரங்களில் நீரே இவர்களுக்கு ஆறுதலாகவும், அடைக்கலமாகவும் இருக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. கருணைக் கடலே இறைவா, நீர் கத்தோலிக்க திருச்சபையை வழிநடத்த தேர்ந்துக்கொண்ட எல்லா அருட்பணியாளர்களுக்காகவும், அவர்களின் தியாக பணிகளுக்காகவும் நன்றி செலுத்துகின்றோம். எம் இளைஞர், இளம்பெண்களுக்கு நல்மனதையும், தியாக உள்ளத்தையும் தந்து தேவ அழைத்தலுக்கு தங்களை அர்ப்பணிக்கும் மனதைரியத்தையும், தெய்வ பக்தியையும் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**06.11.2016 ஆண்டின் பொதுக்காலம் 32ம் ஞாயிறு திருப்பலி**

திரு. D.V.R.Raja

**முன்னுரை**

இறைவனின் அன்புக்கினியோரே, இன்றைய திருப்பலி முன்னுரை இறை நம்பிக்கையை அடிப்படையாக கொண்டது. எத்தகைய இடர்வரினும் விசுவாசத்தோடு துணிந்து நிற்கும்போது தொடர்ந்து பயணிக்கும்போது நீதியின் பொருட்டோ இறைவனின் பொருட்டோ எதை இழப்பினும் அவற்றைப் பெற்றுக்கொள்வோம் என்ற உறுதியும் ஊக்கமும் இறை நம்பிக்கையும் நம்மிடம் வேண்டும். இதையே இன்றைய வாசகத்தில் கிறிஸ்து இயேசு நம்மீது அன்பு கூர்ந்ததால் தமது அருளையும் நிலையான

ஆறுதலையும் எதிர்நோக்கையும் ஊக்கத்தையும் நல்லதையே சொல்லவும் செய்யவும் உறுதிப்படுத்துவார் என எழுதியுள்ளது.

கொடூர அரசன் ஒருவன் ஏழு சகோதரர்களையும் தாயையும் ஒவ்வொருவராக துன்புறுத்தி தங்கள் கடவுளுக்கும் மூதாதையர் வழியாய் கடைபிடித்து வந்த முறைமைகளையெல்லாம் மீறசொல்லி வதைத்து கொன்றான். இதைத்தான் என் பொருட்டோ நீதியின் பொருட்டோ ஒருவர் எதையாவது இழப்பின் இம்மையில் பன்மடங்கும் மறுமையில் நிலை வாழ்வையும் பெற்றுக்கொள்வார் என இயேசு கூறியுள்ளார்.

மறுமையில் இறப்பு இல்லை உறவுமில்லை நாம் தூதர்களுக்கு ஒப்பானவர்களாய் இருப்போம். எனவே நாமும் ஆபிரகாமைப்போல் யோபுவைப்போல் விசுவாசத்தில் நிலைத்திருந்து செபித்து எவற்றையெல்லாம் விண்ணப்பித்தோமோ அவற்றையெல்லாம் பெற்றுக்கொள்வோம் என்ற அவ்விசுவாசத்தில் உறுதி வேண்டி இத்திருப்பலியில் பங்கேற்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

**திருச்சபைக்காக மன்றாடுவோம்**
நமது திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர் இறைப்பணி செய்வோர் யாவரையும் இறைவன் பாதுகாத்து ஆபத்து, நோய், சோர்வு இவற்றை நீக்கி இறைப்பணியை திறம்பட செய்யவும், தூய ஆவியின் துணையிருப்பும் வழிநடத்துதலும் நிறைவாய் பெற்று வல்லமையோடு செயல்பட வேண்டிய ஆற்றலையும் ஞானத்தையும் நிறைவாய் பெற்றிட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**மக்களுக்காக மன்றாடுவோம்**
இறைவா, எம் பங்கு மக்கள் ஒவ்வொருவரையும் நீர்தாமே பாதுகாத்து பங்கின் ஒவ்வொரு நிகழ்வுகளிலும் பங்கேற்று இறை அனுபவங்களைப் பெற்று விசுவாச வாழ்வில் வளர்ந்து முதிர்ச்சி பெறவும் ஆவியின் கனிகளையும் வரங்களையும் பெற்று இறையரசின் கருவிகளாய் விளங்கிடவும் கடன் சுமைகள் நீங்கவும், பற்றாக்குறை அகலவும், பொருளாதாரத்தில் நிறைவடையவும், நோய்கள் நீங்கி சமாதான வாழ்வு வாழவும், அவரவர் தேவைகளை நிறைவேற்ற வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**இளையோருக்காக மன்றாடுவோம்**
எம் பங்கிலுள்ள இளையோர் யாவரும் கல்வியிலும் ஒழுக்கத்திலும் அறிவிலும், தெய்வ பக்தியிலும் சிறந்து விளங்கிடவும், தங்களின் வாழ்வுப் பாதையை சீரான பாதையில் செயல்படுத்தவும், நல்ல வேலைகளைப் பெற்று வாழ்வில் முன்னேறவும் அவரவர் திறமைகளை வெளிப்படுத்தவும் இறை நம்பிக்கையில் விசுவாச வாழ்வில் வளரவும் திருமணமாகாதவர்களுக்கு இறைவன்தாமே நல்ல உற்றத் துணையை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**நாட்டு தலைவர்களுக்காக மன்றாடுவோம்**
எமது நாட்டையாளும் தலைவர்கள் நாட்டையும் மக்களையும் நல்ல முறையில் வழிநடத்தி மக்களும் நாடும் உயர்வு பெறவும் அண்டை நாட்டின் அச்சுறுத்தல் தொந்தரவின்றி மக்கள் அமைதியாய் சுதந்திரமாய் வாழவும் நல்ல கொள்கை திட்டங்கள் வகுத்து மக்களின் தேவையை நிறைவேற்றும் அரசாக விளங்கிடவும், எமது மாநிலத்தில் அரசியல் சூழல்கள் சீரடைந்து வன்முறை, போர், கலவரம் இல்லாத அமைதியான நிலைமை எல்லா இடங்களிலும் நிலவும் பஞ்சம் வறுமை நீங்கி நாட்டு வளமைகள் வீணாகாது மக்கள் பயன்படும்படியாக அமையவும் நாடு செழித்து அனைவரும் இன்புற்று வாழவும் ஒவ்வொரு அரசியல் தலைவரையும் மக்களையும் ஆசீர்வதிக்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 09.11.2016 இலாத்தரன் பேராலய நேர்ந்தளிப்பு திருவிழா — திருப்பலி

திரு. ஜீசஸ் மகுட மன்னன்

**முன்னுரை**

இயேசு கிறிஸ்துவில் பிரிமுள்ளவர்களே, இன்று நமது தாயாம் கத்தோலிக்கத் திருச்சபை இலாத்தரன் பேராலய நேர்ந்தளிப்பின் விழாவைக் கொண்டாடுகிறது. உரோமை பெருநகரின் தலைசிறந்த பேராலயங்களில் முதன்மையானதும் அதிமிகு பழமை வாய்ந்ததுமான தூய யோவான் பேராலயமாகும். உரோமைப் பெருநகரின் மற்ற மூன்று பேராலயங்கள் புனித பேதுரு பேராலயம், புனித மரியன்னைப் பேராலயம், புனித பவுல் பேராலயம் ஆகும். நாம் உண்மையிலிருந்தும் அன்பிலிருந்தும் விலகிச் செல்லும்போது அவர் நம்மிடம் கொடுக்கும் எச்சரிக்கை "என் இல்லமாகிய உங்கள் உள்ளங்களை

கள்வர் குகையாக மாற்றுகிறீர்கள்'' என்பதே. அலகையினால் அலைகழிக்கப்பட்டு, சோர்ந்துபோன நம்மைப்பார்த்து, இயேசு கிறிஸ்து நமக்கு அழைப்பு விடுக்கிறார். திருமுழுக்குப் பெற்று தூய ஆவியினால் அருள்பொழிவு பெற்ற நாம் அனைவரும் ஆண்டவரின் ஆலயங்களாக மாற வேண்டிய கட்டாயத்தையும் இவ்விழா அறிவுறுத்துகின்றது. வாழ்க்கையில் வளமும், செழுமையும் பெற ஆண்டவரின் அன்பின் ஆலயங்களாக மாறி பிறரை மாற்றுவோம் என உறுதியெடுத்து பக்தியுடன் இன்றைய திருப்பலியில் பங்கெடுப்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. இக்கோயிலை இடித்துவிடுங்கள், மூன்று நாளில் இதை கட்டியெழுப்புவேன் என மொழிந்த இறைவா, எம் திருச்சபைத் தலைவர் திருத்தந்தை பிரான்சிஸ் உம்மைத் தொடர்ந்து விசுவாச வாழ்வில் மக்களை அழைத்துச் செல்லவும், அவருடன் ஆயர், குருக்கள், கன்னியர், துறவியர், வேதியர், பொதுநிலையினர் உமது வார்த்தைகளை தம் மனங்களில் விதைத்து வேரூன்றி வளர்த்திடவும், தமது வாழ்வினால் திருச்சபை பலப்படுத்தவும் தேவையான வரங்களைத் தரும்படி உம்மை மன்றாடுகிறோம்.

2. இடுக்கண் வரும்போது உற்ற துணையாகும் இறைவா, இன்றைய திருச்சபை துன்புறும் திருச்சபையாக மாற்றப்பட்டுவிட்டது. மக்களை இறையரசிலிருந்து திசைத் திருப்பி, உலக வாழ்க்கையே உகந்த வாழ்க்கை என அழைத்துச் செல்லும் குருட்டு வழிகாட்டிகளின் பிடியிலிருந்து எங்களைக் காப்பாற்ற தேவையான வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. எம்மோடு வாழ்ந்துக்கொண்டிருக்கும் படைகளின் ஆண்டவரே இறைவா, இறைவனின் உண்மையான ஆலயங்களாக வாழ நீரே எங்கள் உண்மையான இன்பம் என்பதை அறிந்து நீர் மட்டுமே போதும் என்ற மன நிறைவுடன் வாழத் தேவையான வரங்களை வழங்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 10.11.2016 திருத்தந்தை லியோ (சிங்கராயர்) திருப்பலி

திரு. விக்டர்

**முன்னுரை**

இறையன்பர்களே, இன்று நாம் திருத்தந்தை தூய லியோ அவர்களின் நினைவை கொண்டாடுகிறோம். திருத்தந்தை லியோ 4ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவரின் பிறப்பு பற்றி சரியான விவரங்கள் கிடைக்கவில்லை எனினும் அவருடன் பயணித்த மற்ற சான்றோர்கள் இவரை சிறந்த சிந்தனையாளர், சிறந்த அறிவாளி என குறிப்பிடுகின்றார்கள். இவர் திருத்தந்தையாக இருந்த தருணத்தில் இயேசு கிறிஸ்துவின் இறைத்தன்மைக்கும், மனிதத் தன்மைக்கும் எதிராக இருந்த தவறான கருத்துக்களை எதிர்த்து குரல் கொடுத்து இறை மகன் இயேசு கிறிஸ்துவில் மனிதத்தன்மை இறைத்தன்மை இரண்டும் சமமாக வெளிப்பட்டது என்று உறுதிசெய்துக் காட்டினார்.

இன்றைய வாசகங்களும் இறையாட்சியைப் பற்றிய நமது சிந்தனையை தூண்டும் வகையில் அமைந்துள்ளது. கிறிஸ்துவின் இறைத்தன்மையையும் மனிதத்தன்மையும் நாம் முழு விசுவாசக்கண் கொண்டு ஏற்றுக்கொண்டோம் என்றால் அங்கு இறையாட்சி நிறுவப்படுகிறது. இந்த இறையாட்சி என்பது நமது மத்தியில் இருக்கின்றது என்பதை உணர நாம் விசுவாசத்தில் ஆழப்பட வேண்டும். இறையாட்சி நம் மத்தியிலே செயல்படுகிறது அப்படியெனில் இறைவன் நம்மிடையே உள்ளார், அவரை எங்கும் தேடவேண்டாம் என்பதை உணரவும் ஏற்றுக்கொள்ளவும் இன்றைய திருவழிபாடு நமக்கு அழைப்பு விடுக்கிறது. எனவே பக்தியோடு இத்திருப்பலியில் பங்கேற்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. திருச்சபையின் தலைவர்களான திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர் அனைவரும் உம்மீது முழுமையான நம்பிக்கைக் கொண்டு செப வாழ்வில் நிலைத்திருக்கவும், மக்களை நல்வழியில் நடத்திச்செல்ல போதுமான ஞானத்தையும் அருளையும் நிறைவாக பொழிந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. உலக நாடுகளின் தலைவர்கள் அனைவரும் உண்மையிலும், நேர்மையிலும் நிலைத்திருந்து தங்களின் பணிவாழ்வில் மக்களின் தேவைகளை முழுமையாக நிறைவாக செயல்படுத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. அன்பு இறைவா, உம் பிள்ளைகளாகிய நாங்கள் உம்மைப்போன்று பிறரை மன்னிக்கவும், ஏற்றுக்கொள்ளவும் தேவையான மனவலிமையையும், மனப்பக்குவத்தையும் இறைமக்களாகிய

எங்களுக்கு உம் தூய ஆவியின் வல்லமையை நிறைவாக பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**13.11.2016 ஆண்டின் பொதுக்காலம் 33ம் ஞாயிறு** **திருப்பலி**

திருமதி. ராணி வில்சன்

**முன்னுரை**

நம்பிக்கை, நன்னடத்தை, நல்லொழுக்கம், நல்லுறவு, இவை வெற்றிக்கான வழி. இதுவே இன்றைய மையச் செய்தி.

இறை அச்சம் கூடிய நம்பிக்கை - நம்மை பாதுகாப்போடு விடுதலையாக்கும்

நன்னடத்தை - வாழ்நாளெல்லாம் நம் வாழ்வை வளமாக்கும்

நல்லொழுக்கம் - தீயவை நம்மை மேற்கொள்ளாமல் பெற்றோர், ஆசிரியர், அனுபவம் கற்றுக்கொடுத்த மானுட பண்புகள் கொண்டு பயணிக்கும் வழி

நல்லுறவு - ஆடம்பரங்கள், பிரமாண்டங்கள், வீண் நிகழ்வுகளில் மனதை செலுத்தாமல் என்ன நேர்ந்தாலும் இறையுறவிலும் பிற உறவிலும் நிலைத்திருத்தல்

இந்த மையச் செய்திகளை உள்வாங்கி நமதாக்கி இறைவன் கொடுக்கின்ற அருளையும் ஞானத்தையும் பெற்றுக்கொள்ள திருப்பலியில் மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. தாயும் தந்தையுமான இறைவா, புனிதத்தை நோக்கி பயணிக்கும் எங்கள் திருஅவையின் பணியாளர்களாய் பணிபுரியும் அனைவரையும் உமது எளிய உள்ளம் கொண்டு ஏழைகளுக்கு முன்னுரிமை அளித்து அவர்கள் வாழ்வும் அதனால் இவ்வுலகிற்கு எங்கள் திருஅவை முன்மாதிரியாகவும் எடுத்துக்காட்டாகவும் அமையவும் வரம்வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

2. குடும்பத்தை திருநிலைக்கு உயர்த்திய இறைவா, இல்லறத்தார் அனைவருமே நல்ல மனிதர்களாய் வாழ்ந்து புனித நிலையடைய இயலும் என்பதை திருஅவைக்கு சான்று பகர்ந்து வருகிறது. நாங்களும் இதைப்போல் உன்னத நிலையை அடைந்து விண்ணக விண்மீன்களாய் வளர உமது வல்லமையை பொழிந்து ஆசீர்வதிக்க உம்மை மன்றாடுகிறோம்.

3. தீமைகளை கண்டு எரிச்சல் கொள்ளாதே என்ற இறைவா, தினம் தினம் எங்களது வாழ்வில் பலதீமைகளை பார்க்கிறோம். தீமைகளுக்கு உள்ளாகிறோம். வேதனையில் வருந்துகிறோம். என்று உமது அரசும் ஆட்சியும் வரும் என ஏங்கித் தவிக்கிறோம். உமது அன்பும் அரவணைப்பும் பாதுகாப்பும் இவ்வுலகிற்கு தேவையென கூக்குரலிட்டு உம்மை அழைத்து செபிக்கின்றோம். வாரும் உமது புனித மழையை எங்கள்மேல் பொழிந்தருள உம்மை மன்றாடுகிறோம்.

4. புனிதமே இறைவா, உமது திருமகன் ஞானத்திலும் அறிவிலும் வளரும்போதே சிறந்து விளங்கினார். எங்கள் பிள்ளைகள் வருங்கால சந்ததியர் இறைமகனைப்போல வாழ்ந்து திருஅவையையும் சமூகத்தையும் புனித நிலைக்கு அழைத்துச் செல்ல வேண்டிய அனைத்து ஆற்றலையும் வரங்களையும் அளித்து வழிநடத்த உம்மை மன்றாடுகிறோம்.

**14.11.2016 குழந்தைகள் தினவிழா** **செபவழிபாடு**

திருமதி. டிலைலா சேவியர்

**முன்னுரை**

"பிள்ளைகள் ஆண்டவர் அருளும் செல்வம் மக்கட்பேறு அவர் அளிக்கும் பரிசு" திபா. 127:3

இறை இயேசுவில் அன்புள்ள மாணவ செல்வங்களே, இன்று உலகம் முழுவதும் குழந்தைகளின் தினத்தை சிறப்பிக்கின்றனர். இந்த நல்ல நாளில் இங்கு ஒன்று கூடியுள்ள நாமும் சிறப்பிக்கும் இந்நேரத்தில் நம்மையெல்லாம் இந்நாள்வரை பாதுகாத்து வழிநடத்திவரும் இறைவனுக்கு நன்றி சொல்வதோடு நம் அனைவரையும் இறைவன் தன்னுடைய வல்லமையான கரங்களால் ஆசீர்வதிக்க வேண்டுமென்று இன்றைய செபவழிபாட்டில் அனைவரும் சேர்ந்து செபிப்போம். நமது உள்ளத்தையும் உடலையும் ஒருமனப்படுத்தி இறைவனை நம்மிடையே அழைக்க இப்பாடலை பாடுவோம்.

**பாடல்: என்னோட இயேசுவே கொஞ்ச நேரம் பேசுமே...**

**நற்செய்தி முன்னுரை**

அன்பு குழந்தைகளே, இயேசு குழந்தைகளை மிகவும் நேசிக்கிறார். அன்பு, கீழ்ப்படிதல், தாழ்ச்சி, மன்னிப்பு, சேவைமனப்பான்மை இவற்றை தம் போதனையின் கருப்பொருளாக கொண்ட அவர்

குழந்தைகளின் மனநிலையைப் புகழ்ந்து பாராட்டி குழந்தைகளுக்கும் விண்ணரசிற்கும் உள்ள நெருங்கிய தொடர்பை தன்னுடைய சீடர்களுக்கு விளக்குகிறார். அந்த நிகழ்வினை இப்போது நற்செய்தி வாசகத்தின் வழியாக வாசிப்பதை கவனமுடன் செவிமடுப்போம்.

**நற்செய்தி: மத் 19:13**
விளக்க கருத்து: யாராவது ஒருவர் சிறு கருத்து பகிரலாம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**
ஒவ்வொரு மன்றாட்டையும் முடிக்கும்பொழுது மேடையில் நிற்பவர்கள்மேல் மேலிருந்து உதிரி பூக்களை தூவ வேண்டும்.

பெற்றோர்கள் ஒருசிலரை மேடைமேல் கண்களை மூடி தலை தாழ்த்தி நிற்க வேண்டும்.

**பெற்றோர்:** கருணைக் கடலே இறைவா, எங்களைப் பெற்றெடுத்து அன்புகாட்டி எங்கள் தேவைகளை அக்கறையோடு செய்து எங்களுக்காகவே தியாக வாழ்வினை வாழ்ந்துவரும் எங்கள் பெற்றோர்களை நிறைவாக ஆசீர்வதியும் அவர்களின் வாழ்வில் நம்பிக்கையையும் புத்துணர்வையும் தந்தருளும். இறைவா, எம் பெற்றோர்களின் வாழ்வில் ஏற்படும் பிரச்சனைகள், சோதனைகள், உடல்நலக்குறைவுகள் இவைகளிலிருந்து விடுதலை பெறவும், அனைத்தையும் தாங்கிக் கொள்ளும் மனவலிமையும் சக்தியையும் அளிக்க வேண்டுமென்றும், பிள்ளைகளாகிய எங்களால் ஆறுதலும், தேறுதலும் மனநிம்மதியும், மகிழ்ச்சியும் எம் பெற்றோர்களுக்கு நாங்கள் அளித்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

(ஆசிரியர்கள் மற்றும் அரசாங்க தேர்வு எழுதும் மாணவ மாணவிகளில் தலைவர்கள் மேமைமீது நிற்றல்)

**ஆசிரியர்:** ஞானத்தின் ஊற்றே இறைவா, படிக்கும் பிள்ளைகளாகிய நாங்கள் அனைவரும் நன்றாக படிக்கவும், கல்வியிலும், ஒழுக்கத்திலும் சிறந்து விளங்கவும், எங்களுக்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு நல்ல உடல்உள்ள நலம் தந்து அவர்களின் குடும்பங்களையும் ஆசீர்வதிக்க வேண்டுமென்றும், இவ்வாண்டு அரசாங்கத் தேர்வினை எழுதுபவர்கள் நன்றாக படித்து, நல்ல மதிப்பெண்களுடன் வெற்றிப்பெறவும் உமது அருளையும், ஞானத்தையும் நிறைவாக பொழிந்து உமது தூய அவியின் துணையை அளித்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

இரக்கத்தின் இருப்பிடமே இறைவா, பெற்றோரை இழந்து அனாதை இல்லங்களில் வாழ்கின்ற பிள்ளைகளை ஆசீர்வதியும். நீர்தாமே அவர்களுக்கு தாயும் தந்தையுமாக இருந்து வழிநடத்திட வேண்டுமென்றும் வறுமையின் காரணமாக பலவகையான தொழிற்சாலைகளில் உழைப்பிற்கேற்ற வருமானமின்றி உழைத்துக்கொண்டிருக்கும் சிறுவர், சிறுமியர், சாலையோர சிறார்கள், கைவிடப்பட்டோர் ஆகிய அனைவரையும் நீர் ஆசீர்வதித்து அவர்களுக்குப் புதியதோர் வாழ்க்கையை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

(மாற்றுத்திறனாளிகளான மாணவ மாணவியரை மேடையின்மீது நிற்க வைத்தல்)

ஆறுதலின் ஊற்றே இறைவா, மாற்றுத்திறன் கொண்ட அனைத்து பிள்ளைகளையும் நீர் ஆசீர்வதியும். மாற்றுத்திறன் கொண்டோரை இச்சமுதாயம் ஏற்றுக்கொண்டு, அவர்களிடமுள்ள திறமைகளை புரிந்துக்கொண்டு, வாழ்வில் முன்னேற உதவ வேண்டுமென்று செபிக்கின்றோம். குணமாக்கும் வள்ளவரே, அன்று உம் திருமகன் பலரை குணமாக்கியதுபோல இன்று இவர்களின் குறைகளை நீக்கி வாழ்வில் அனைவராலும் மதிக்கக் கூடிய மக்களாக நீர் ஆசீர்வதிக்க வேண்டுமென்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

**ஆசிரியர்:** அன்பு மாணவ மாணவிகளே, இறைவன் நம்முடைய வேண்டுதல்களை ஏற்று, நம்முடைய எல்லா தேவைகளையும், நிறைவேற்றுகின்றார் என்ற ஆழ்ந்த நம்பிக்கையோடும் விசுவாசத்தோடும் இந்த செபவழிபாட்டை பாடலோடு நிறைவு செய்வோம்.

**பாடல்:** இயேசுவின் கரங்களில் நான் தவழ்கின்றேன்...

"சிறுபிள்ளைகளைப்போல தம்மை தாழ்த்திக்கொள்பவரே விண்ணரசில் மிகப் பெரியவர்" மத் 18:4

**ஆசிரியர்:** அன்பு செல்வங்களே, இன்றைய சிறப்பு செபவழிபாடு தற்போது நிறைவடைகிறது. இறைவனோடு ஒன்றித்துள்ள நாம் இப்போது நமது மகிழ்ச்சியை வெளிப்படுத்த சிறிய நிகழ்வினில் பங்கு கொள்வோம்.

(பின் வருவனவற்றில் ஒன்றைத் தேர்ந்துக்கொள்ளலாம்.)

**நேரு இந்தியாவின் முதல் பிரதம மந்திரி - புறா:**
நம்மிடையே உங்களையெல்லாம் மிகவும் நேசிக்கும் நேரு சமாதானத்தை விரும்புகிறவர், உலக சமாதானத்தின் அவசியத்தை நிலைநாட்டும் வகையில் இப்போது இந்த புறாவினை வானிலே பறக்க விடலாம்

**இந்து, முஸ்லீம், கிறிஸ்த்தவம் - வேடத்தில் அணிந்துள்ள மாணவர்கள்**
மாணவ மாணவிகளாகிய நம்மிடையே மத வேற்றுமை என்னும் தீய சக்தியை வளரவிடாமல் அனைவரும் இறைவனின் பிள்ளைகள் என்ற எண்ணங்களை நிருபிக்க மூவரும் பலூன்களை பறக்க விடலாம்

**அன்னை தெரேசா**
இன்றைய தலைமுறையினரின் புனிதையான இவர்கள் மாணவ மாணவியர்களிடையே இரக்கமும், பிறர் சேவையும் வளரவேண்டுமென்று நம்மை ஊக்குவிக்க இந்த பலூனை வானில் பறக்க விடலாம்

**அப்துல்கலாம்**
பள்ளிக்குழந்தைகளை அதிகம் நேசித்த இவர் ஒவ்வொரு மாணவ மாணவியரும் எதிர்காலத்தில் ஓர் சிறந்த விஞ்ஞானியாகவோ, அல்லது ஆற்றலும் அறிவும் நிறைந்தவர்களாக கல்வி கற்று வாழ்வில் உயரவேண்டுமென்று வாழ்த்தி இந்த பலூனை பறக்க விடலாம்.

## 15.11.2016 தூய ஆல்பர்ட் திருப்பலி

திருமதி. ராணிசம்பந்தன்

**முன்னுரை**
இறையன்பில் வாழும் இனிய மக்களே, பெரிய ஆல்பர்ட் என்னும் புனிதரின் நினைவு நாளை இன்று நினைவில் கொள்வோம். நமது அன்னை மரியாமீது மிகுந்த பக்தி உள்ளவர். புனித சாமிநாதரின் சபையில் குருவாகி கல்வி பயின்று பேராசிரியராக பணிபுரிந்தவர். அனைவரும் பாராட்டும்படியான நூல் ஒன்றை எழுதி பிரபலமானவர். தூய தாமஸ் அக்குவினாஸ் இவரிடம் கல்வி பயின்றவர். அவசியம் இல்லாமல் யாரிடமும் அதிகம் பேசாத தூய தாமஸை பற்றி மாணவர்கள் "ஊமை மாடு" என்று கேலி பேசியதை அறிந்த தூய ஆல்பர்ட் இந்த ஊமைமாடு பேசும் சத்தம் உலகெங்கும் கேட்கும் என்று முன்னுரைத்தது நிறைவேறியது. இவரது செயலாற்றலைக் கண்டு இவரை நகரின் ஆயராக்கினார்கள். அப்போதைய பாப்பரசர்களும், அரசர்களும் இவரிடம் ஆலோசனை பெறுவார்கள். அந்தளவுக்கு அக்காலத்தில் பரவியாயிருந்த தவறான கொள்கைகளை எதிர்த்து போராடினார். நீதியும், அன்பும்தான் சமாதானத்தின் அடிப்படை என்று செயலாற்றியவர். தூய ஆல்பர்ட்டின் நினைவு நாளை சிறப்பிக்கும் நாம் இறைவனுக்கு ஏற்றவர்களாய் வாழ அழைக்கப்பட்டிருக்கிறோம் என்ற சிந்தனையோடு இத்திருப்பலியில் இணைவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்ல இறைவா, திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் பொதுநிலையினர் அனைவரும் பண்பாடற்ற அரசியல் சூழ்நிலையில் வாழும் இக்காலகட்டத்தில் பொறுமையுடனும் நேர்மையுடனும் நம்பிக்கையுடனும் மனசோர்வின்றி பணியாற்றவும், கிறிஸ்துவின் இறையாட்சிக்கு எவ்வித பாதகமுமின்றி செயலாற்றவும் வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. மனமாற்றமே வாழ்வின் ஆதாரம் என்றுரைத்த இறைவா, மக்கள் சேவையே மகேசனின் சேவை என்றுரைத்து மக்களின் தேவைகளை நேர்மையுடன் நிறைவேற்றுகிறோம் என்று பதவிகளுக்கு வந்த நாட்டின் பொறுப்பாளர்கள் சுயஆதாயம் தேடி ஊழல்களுக்கு இடம் கொடாமல் செயலாற்ற வேண்டிய நல்ல மனமாற்றத்தை வழங்கிட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. எழுச்சியின் நாயகனே இறைவா, "முழங்கி பேசுவது பெரிதல்ல, நம் செயல்பாடுகள் வழியாக வாழ்ந்து காட்டுவதுதான் பெரிது" என்று நம் திருத்தந்தை பிரான்ஸிசின் உரையின்படி வாழ்ந்து காட்டும் மனபக்குவத்தை எமக்கு அளிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. அனைத்து மக்களுக்கும் உம் உரிமை பேற்றினை அளித்திருக்கும் இறைவா, வெகு காலமாக தலித் கிறிஸ்தவர்களுக்கு மறுக்கப்பட்டிருக்கும் உரிமைகள் அரசிடமிருந்து பெற்று தரவேண்டுமென்றும் சாதிக்கு அப்பாற்பட்ட மனநிலையை அனைத்து திருச்சபை தலைவர்களுக்கும் அளிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 18.11.2016 தூய பேதுரு-பவுல் பேராலயங்கள் அர்ச்சிப்பு திருவிழா திருப்பலி

திரு. ஜான் சுரேஷ்

**முன்னுரை**

இறையரசின் இனியோரே, இன்று நம் தாய் திருச்சபையானது தூய பேதுரு, தூய பவுல் பேராலயங்கள் நேர்ந்தளிப்பு திருவிழாவை கொண்டாட நமக்கு அழைப்பு விடுக்கிறது. புனித பேதுரு கல்லறையின்மீது பேரரசர் கான்ஸ்டான்டைன் 319ம் ஆண்டு பேராலயம் ஒன்று எழுப்பினார். காலப்போக்கில் பலமுறை சீரமைக்கப்பட்ட இந்த பேராலயம் இடிந்துவிழும் நிலையில் இருந்ததால் புதிய திருத்தலம் கட்ட முடிவு எடுக்கப்பட்டது. அதன்படி அடிக்கல் நாட்டினார் திருத்தந்தை எட்டாம் அர்பன். 1626 நவம்பர் 18 அன்று புனிதப்படுத்தி அர்ப்பணித்தார்.

தூய பவுலின் கல்லறையிலும் திருத்தந்தை தூய கிஸீற்றல் சிறிய நினைவுதளம் அமைத்தார். அதன்மேல் பேரரசர் கான்ஸ்டான்டைன் பேராலயம் ஒன்றை எழுப்பினார். உரோமை மதிலுக்கு வெளியே அமைந்த இந்த பேராலயம் 1823ம் ஆண்டு தீக்கிரையானது பெருமை மிகுந்த இந்த பேராலயத்தை புதுப்பிக்க ஏராளமான நன்கொடைகள் பெறப்பட்டு வேலையை தொடங்கினார்கள். இந்த பேராலயத்தை திருத்தந்தை ஒன்பதாம் பத்திநாதர் 1854ம் ஆண்டு புனிதப்படுத்தி அர்ப்பணித்தார். ஆலயங்கள் அருள் வழங்கும் ஓவியங்கள், நம் வாழ்வை வளமாக்கும் காவியங்கள், என்ற அடிப்படையில் நாம் இவ்விழா திருப்பலியில் பங்கேற்று இறையருள் பெறுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. தாயும் தந்தையுமான இறைவா, ஆலயங்களுக்கெல்லாம் ஆலயமாக திகழும் கிறிஸ்துவின் மறையுடலாகிய திருஅவையை மாசுமருவின்றி பாதுகாத்து கட்டிக்காக்கின்ற எம் ஞான மேய்ப்பர்களை நீர் ஆசீர்வதித்து வழிநடத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்பு தந்தையே இறைவா, ஒவ்வொரு மனிதனும் கிறிஸ்துவின் மறையுடல் என்பதை உணர்ந்து, அந்த உடலையும் அதன் உறுப்புக்கள் ஒவ்வொன்றையும் தவறான கருத்துக்களாலும், சொற்களாலும் அழித்துவிடாமல், அதை பாதுகாத்து புனிதமாக பராமரிக்கவும் புனித வாழ்வு வாழவும் வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. அழகே உருவான எம் இறைவா, உலகமே உமது ஆலயம் இவ்வுலகத்தை பாதுகாக்க வேண்டியது எங்கள் கடமை. தன்னை நேசிப்பதுபோல பிறரையும் இயற்கையையும் நேசித்து, சமூக அநீதிகள் எங்குள்ளதோ, அவற்றை களைந்து தூய ஆவியில் நிறைந்த உலகமாக மாற்றிட வேண்டிய ஆற்றலைத் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 20.11.2016 கிறிஸ்து அரசர் பெருவிழா (இறை இரக்க ஆண்டின் நிறைவு) திருப்பலி

திரு. P. விக்டர்

**முன்னுரை**

இன்று நாம் கிறிஸ்து அரசர் பெருவிழாவைக் கொண்டாடுகிறோம். இந்த விழாவுடன் நமது கத்தோலிக்க இறைவழிபாட்டு ஆண்டின் பொதுக்காலம் நிறைவு பெருகிறது. அடுத்த வாரம் முதல் திருவருகைக் காலத்தில் நுழைய இருக்கிறோம். இந்த விழாவானது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இறையாட்சி தன்மைகளை எடுத்தியம்பும் விதமாக அவரது ஆளுகையை அனைவரும் அறியச் செய்யும் விதமாக திருத்தந்தை 11ம் ஆசீர்வாதப்பரால் 1925ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. தொடர்ந்து சிறு மாற்றங்களுடன் 1970ம் ஆண்டிலிருந்து திருத்தந்தை ஆறாம் சின்னப்பரால் ஆண்டின் பொதுக்காலத்தின் கடைசி ஞாயிறாக மாற்றியமைக்கப்பட்டு இன்றுவரை கொண்டாடப்பட்டு வருகிறது.

நீர் அரசன்தானா? (யோவா 18:37) என்று பிலாத்து கேட்க "ஆம்" என்று இயேசு பதில் கூறி தான் அரசன் தான் என்பதை விளங்கச் செய்கிறார். கிறிஸ்துவின் அரசு என்பது இரு கூறுகளைக் கொண்டது. ஒன்று இரக்கத்தின் அரசு மற்றது மகிமையின் அரசாகும். இவ்வுலகில் நாம் வாழும் வாழ்வு இரக்கத்தின் அரசாகும். இதைத்தான் இயேசு "இறையாட்சி உங்களிடையே உள்ளது" (லூக் 17:21) என்று கூறுகிறார். இரக்கத்தின் ஆட்சியில் இயேசுவின் இரக்கம் உண்டு, மன்னிப்பு உண்டு, ஆறுதல்

உண்டு, தேவ ஆலோசனை உண்டு, பாதுகாப்பு உண்டு, அவரது மீட்பு உண்டு, சுகம் உண்டு, அவர் தரும் மகிழ்ச்சி உண்டு. இந்த உறுதியோடு இத்திருப்பலியில் கலந்து கொண்டு செபிப்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. அகில உலகையும் ஆளுகை செய்யும் ஆண்டவரே இறைவா, உமது இறையாட்சியின் தூதுவர்களாய் எங்களிடையே பணியாற்றும் எமது திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகளைக் கண்ணோக்கும். இறைமக்களை வழிநடத்தும் பணிவாழ்வில் உமது வழிநடத்துதலையும் உமது ஆலோசனைகளையும் உமது அருட்பொழிவையும் பெற்றவர்களாய் உமது விருப்பம் அறிந்து சிறப்பான முறையில் செயலாற்றிட வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. இரக்கத்தின் அரசே இறைவா, இந்த உலகில் நீதிக்காக எதிர்நோக்கியிருக்கும் மக்களையும் நியாயத்திற்காக போராடிவரும் மக்களையும் ஆசீர்வதியும். இவர்களது போராட்டங்களில் உமது பாதுகாப்பையும், பராமரிப்பையும், வழிநடத்துதலும் இருக்க வரம் வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. நீதியின் அரசே இறைவா, பாவிகளாகிய எங்களுக்காக மரித்ததினால் எங்கள்மீது நீர் கொண்டிருந்த அன்பை விளங்கச் செய்தீர். உமது அன்பின் நிமித்தம் எங்களை மன்னித்து, நாங்கள் மனந்திரும்பி இறையாட்சியை ஏற்று வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

4. தயை மிகுந்த அரசே இறைவா, உமது இறையாட்சியின் இரக்கத்தை அனுபவித்த நாங்கள் எங்களோடு வாழும் மக்களுக்கு இரக்கம் காட்டுகிறவர்களாய் தயை புரிகிறவர்களாய் மன்னிப்பு அளிப்பவர்களாய், அன்பு செலுத்துகிறவர்களாய் எல்லோரையும் மனப்பூர்வமாய் மன்னிக்கிறவர்களாய் வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## 21.11.2016 மரியாள் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கப்பட்ட திருவிழா திருப்பலி

திரு. ஜீசஸ் மகுட மன்னன்

**முன்னுரை**

தூய கன்னிமரியாளின் பாசத்தில் பிரியமுள்ள கிறிஸ்துவ பெருமக்களே, இன்று நமது தாய் திருச்சபையானது தூய கன்னிமரியாளை காணிக்கையாக ஒப்புக்கொடுக்கப்பட்ட விழாவினை சிறப்பிக்க நம்மை அழைக்கின்றது. இன்றைய நற்செய்தியில் மரியா இறை வாழ்த்தைப் பெற்றதிலிருந்து இறைச் சித்தத்தை நிறைவேற்றி வருகிறார் என்பதை மறைமுகமாகக் கூறி தாயைப் பெருமைப்படுத்துகிறார் இயேசு. இறைவனின் திருவுளத்தை நிறைவேற்றுவதில் முதன்மையான இடத்தைப் பெறுபவர் அன்னை மரியாள் ஆவார். கருவறைத் தொடங்கி கல்லறை வரை கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றத் தூண்டியது "ஆகட்டும்" என்ற ஒரு தாழ்மையான பதில்தான். நாமும் மரியன்னையைப்போல நம்பிக்கையிலும் பக்தியிலும் சிறந்து வாழ இத்திருப்பலியில் பக்தியுடன் பங்கேற்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. கடவுளால் ஆகாதது ஒன்றுமில்லை என உணர வைத்த இறைவா, வானதூதரின் அழைப்பை ஏற்று நான் ஆண்டவருடைய அடிமை எனத் தம்மையே மரியா முழுமையாக இறைப்பணிக்கு அர்ப்பணம் செய்கிறார். மகனையும் கோவிலில் இறைப்பணிக்கு அர்ப்பணமாக்குகிறார். இறுதியில் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்கு அவரைத் தியாகம் செய்ததே அவரது அர்ப்பணத்தின் உச்சம். இந்த முழுமையான தியாக அர்ப்பணமே அவரது கன்னிமையின் சாரம். நாங்களும் அர்ப்பணத்தின் மேன்மையறிந்து, உம் திருவுளப்படி வாழத் தேவையான வரமருள வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

2. தியாகமே உருவான இறைவா, பிறர் நலனுக்காக, மகிழ்வுக்காக, சமூக நீதிக்காக, நலிந்தோர் நல்வாழ்வுக்காக தன்னலம் கருதாது தன்னை அன்பு பணிகளிலும் அறச் செயல்பாடுகளிலும் ஈடுபடுவதன் வழியாக இறைவனுக்குத் தம்மை அர்ப்பணிப்பதே சமயம் சார் கன்னிமையின் உண்மைப் பொருள் என வாழ்ந்துக்காட்டிய மரியாவைப்போல் நாங்களும் வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. தூயவரே இறைவா, நாங்கள் திருமுழுக்கு, உறுதிபூசுதல் வழியாக ஆவியின் அருள்பொழிவைப் பெற்றுள்ளோம். அதன்வழியாக இறைவாக்கினர்களாகவும், தலைவர்களாகவும், குருக்களாகவும் திருநிலைப்படுத்தப்பெற்று இயேசுவின் இந்த முப்பெரும் பணிகளிலும் முழுமையாகப் பங்கேற்கிறோம். நற்கருணை வழியாக உமது ஆவியைப் பெற்று அப்பணிகளை ஆற்றும் வல்லமையைத் தொடர்ந்து பெற வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**22.11.2016 தூய செசிலியம்மாள் திருவிழா திருப்பலி**

திரு. ஹென்றி ஸ்டீபன்

**முன்னுரை**

அன்பிற்குரியோரே, இன்று பாடகர்களின் பாதுகாவலியான தூய செசிலியம்மாளின் விழாவை திருச்சபை கொண்டாடுகிறது. தூய்மை வாழ்வு வாழ்ந்து கன்னிமையில் வார்த்தைப்பாடு கொடுத்து, எப்பொழுதும் நற்செய்தி நூலை எங்கும் எடுத்துச் செல்வதோடு கைகளை விரித்து செபிப்பார். இறுதியாக பல சித்தரவதைக்கு ஆளாகி மரிக்கும்போது இயேசுவின் நாமத்தை அறிக்கையிடுவோம். அவரை மறுதலிக்க மாட்டோம் என்று கூறி தூய செசிலியம்மாள் தனது ஆன்மாவை இறைவனிடம் கையளித்தார். அவரது சாட்சியம் உணர்ந்து என்றும் இறைவனின் புகழ்ப்பாட இத்திருப்பலியில் வரம் வேண்டுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. அன்பின் இறைவா, இரக்கத்தின் யூபிலி ஆண்டை முடித்துள்ள நாங்கள் இந்த ஆண்டில் எடுத்துக்கொண்ட முயற்சிகளின்படி தொடர்ந்து இறை இரக்கத்தின் மக்களாக விசுவாசத்தை வளர்த்திட வேண்டிய வரங்களைத் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. காலங்களைக் கடந்த இறைவா, இறுதி நாளைக் குறித்து போதிக்கும் போலி இறைவாக்கினர்களைக் குறித்து எச்சரிக்கையாய் இருந்து நாங்கள் எப்போதும் அந்நாளுக்காகத் தயாராக இருக்கக் கூடிய மனதினை தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. இரக்கத்தின் இறைவா, எங்களுக்கு இறை இரக்கத்தின் ஆண்டில் பல்வேறு கூட்டங்கள், செபவழிபாடுகள், விவிலிய கருத்தரங்குகள், செபங்கள், பொருள் உதவிகள் ஆகியவற்றைத் தந்து வழிநடத்திய எங்கள் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், பொதுநிலையினர், தலைவர்கள் ஆகியோரை ஆசீர்வதிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. நீதியின் இறைவா, நாட்டில் மதவாத சக்திகளின் சூழ்ச்சியை மக்கள் அறிந்து அவர்களது எண்ணம், சிந்தனை, செயல்கள் அனைத்தும் வலுப்பெறாதபடி விழிப்புடன் நடந்துக்கொள்ள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**27.11.2016 திருவருகைக் காலத்தின் முதல் ஞாயிறு திருப்பலி**

திரு. ஜான் அலெக்ஸ்

**முன்னுரை**

அன்புக்குரியவர்களே, இன்று திருவருகைக் காலத்தின் முதல் ஞாயிறை திருஅவை கொண்டாடுகிறது. திருவருகைக் காலம் எதிர்நோக்கிக் காத்திருக்கும் காலம் ஆகும். எபிரேய மக்கள் மெசியாவின் வருகையை எதிர்பார்த்தனர் என்றும் அவர்களுடைய எதிர்பார்ப்புக்கள் இயேசு கிறிஸ்துவில் நிறைவேறின எனவும் நாம் அறிவோம். திருவருகைக் காலத்தில் இதை நாம் நினைவு கூர்கின்றோம். நம் வாழ்வு சார்ந்த எதிர்பார்ப்பும் திருவருகைக் காலத்தில் தெரிகிறது. மனிதரிடையே போரும் சண்டை சச்சரவும் மறைந்து அமைதி நிலவும் புதியதொரு காலம் மலரும் என்பது நம் எதிர்பார்ப்பு. கிறிஸ்துவின் வருகையால் அமைதி நிலவும் புதியதொரு காலம் மலரும் என்பது நம் எதிர்பார்ப்பு. கிறிஸ்துவின் வருகையால் இது நிகழும் என்பது நம் நம்பிக்கை.

கிறிஸ்துவை நாம் சந்தித்து அச்சந்திப்பின் வழியாக நம் வாழ்க்கை வளம் பெறவும் நம் இறுதிச் சந்திப்புக்கு நாம் என்றுமே தயாராக இருக்கவும் இத்திருவருகைக்காலம் நமக்குத் தூண்டுதலாக அமைய வேண்டி இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. திருச்சபையே இறையசின் முன்னோடி என்பதை உணர்ந்து என்றும் உம் அரசிற்காக உழைக்கும் மனம் தர வேண்டுமென்று அனைத்திலும் சிறந்தது அன்பே என்பதை அறியும் நாங்கள் உண்மையான அன்பின் மக்களாக வாழ வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. இறைவா அமைதி தேடி ஏங்குகின்ற மக்களின் வாழ்வில் இன்னும் கோலோச்சுகின்ற அடிமைத்தனங்கள் மறைந்து சமத்துவமும், அன்பும், சுதந்திர அனுபவமும் விடிந்திட அதற்காக நாங்கள் உழைத்திட அருள்தர வேண்டுமென்றும் வாழ்க்கையில் மாற்றங்கள், வளர்ச்சி, மன அமைதி

ஆகியவற்றை தேடி அலைந்து சோர்ந்து உம் உடனிருப்பை எதிர்பார்த்து காத்திருக்கும் அனைவரும் உம்மை கண்டடையும் வரம் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. ஏழை, எளிய, ஆதரவற்ற, கைவிடப்பட்டோர், இன்னலுறுவோருக்கு உமது அன்பை அளிக்கும் தாராள மனதை எங்களுக்கு தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**30.11.2016 தூய அந்திரேயா திருத்தூதர் திருப்பலி**

திருமதி. பத்மாவதி

**முன்னுரை**

அன்பு இறைமக்களே, இன்று நம் திருச்சபையானது இயேசுவின் திருத்தூதர்களில் ஒருவரான தூய அந்திரேயாவை நினைவு கூற அழைக்கிறது. ஜாதி மத பேதமின்றி அனைவருக்கும் கடவுள் ஒருவரே. அவர் அளவற்ற நன்மைகளை பொழிகிறார். ஆண்டவரின் பெயரை அறிக்கையிட்டு மன்றாடும் எவரும் மீட்புப் பெறுவர். கடவுள்மீது நம்பிக்கை கொண்டோர் வெட்கத்திற்கு உள்ளாகமாட்டார் என 1உரோ.10:9-18ல் கூறப்பட்டுள்ளது. இயேசுவின் அழைக்கும் குரலை ஏற்று நம்பிக்கையுடனும் உறுதியோடும் வாழ இத்திருப்பலியில் பங்குபெறுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. திருச்சபையின் தலைவராகிய இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும் புனித அந்திரேயாவைப்போன்று ஆண்டவர் இயேசுவின் திருவுளத்தை அறிந்துணர்ந்து அதன்படி செயல்பட அருள்பொழிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. இரக்கத்தின் ஊற்றே இறைவா, இரக்கத்தின் யூபிலி ஆண்டில் வாழும் நாங்கள் எம்மை சூழ்ந்து வாழும் ஏழை எளியவர்களின் துன்பங்களைப்போக்கிடவும், எம்மாலான உதவிகளைப் புரிந்திடவும் எப்போதும் உமது இறக்கம் மனதில் நிலைத்து செயல்பட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. நம்பிக்கையின் நாயகனே இறைவா, உம்மை நம்பினவர்களை ஒருபோதும் கைவிடமாட்டீர் என்பதற்கேற்ப உம் மந்தைகளாகிய எம் பங்குத்தந்தை, பங்கு மக்கள், குடும்பங்கள், இளையோர் அனைவரையும் இறைவழியிலும் தபமுயற்சியிலும் நிலைத்திருக்கவும், எங்களை வழிநடத்தும்படியாக இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## பகுதி - 2

### 1. இறை இரக்க ஆண்டு நிறைவு - நமக்கு தரும் சவால்கள்

திரு. ஜான் அலெக்ஸ்

இரக்கமுடையோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவர் (மத்.5:7) என்பது இயேசுவின் இவ்வார்த்தைகள் குறிப்பாக இப்புனித ஆண்டில், மலைப்பொழிவின் இவ்வார்த்தைகளுக்காக நாம் ஏங்க வேண்டும். திருவிவிலியத்தின் நாம் காண்பது போன்று, இரக்கம் என்பதுதான் நம்மை இயக்கும் உயிர் மூலச் சொல்லாக இருந்து நம்மீது உள்ள கடவுளின் ஈடுபாட்டைச் சுட்டிக் காட்டுகிறது.

இயேசுவின்மீதும் அவரது இரக்கமுள்ள பார்வைமீதும் நம் கண்கள் நிலைநிறுத்தப்படும் பொழுது நாம் போற்றுதலுக்குரிய மூவொரு கடவுளின் அன்பை அனுபவிக்கின்றோம் என்பதை நாம் உணரவேண்டிய காலம் இது. அதுமட்டுமல்ல இயேசு நிகழ்த்திய அடையாளங்கள் குறிப்பாக பாவிகள், ஏழைகள், ஒதுக்கப்பட்டோர், நோயுற்றோர், துன்புறுவோர் ஆகியோர் மட்டில் நிகழ்த்தியவை. இவற்றை நாம் நன்றாக கவனித்தால், இவை அனைத்தும் இரக்கத்தைக் கற்றுக் கொடுப்பவையாகவும், இயேசுவிடமுள்ள அனைத்தும் இரக்கத்தையே கொண்டுள்ளது என்பதையும் நாம் புரிந்துகொள்ள முடியும். இரக்கம் இல்லாத ஏதும் அவரில் இல்லை.

**திருஅவையில்:** விசுவாசிகளுக்கு அவள் வழங்கும் மேய்ப்புப்பணி முழுவதிலும் இரக்கம்தான் மிக முக்கியமான அடித்தளமாக இருப்பதை நாம் பார்க்கின்றோம். அவளின் போதனையிலும் உலகில் அவளின் சாட்சிய வாழ்விலும் இரக்கம் சிறிதும் குறைவுபடக் கூடாது. திருஅவையின் நம்பகத்தன்மையே அவள் எந்த அளவுக்கு இரக்கத்தையும் பரிவிரக்க அன்பையும் காட்டுகிறாள் என்பதைக் கொண்டுதான் காணப்படுகிறது. பரந்துபட்ட பண்பாட்டில் இரக்கத்தை வாழ்ந்து காட்டுவது குறைந்து கொண்டே போகிறதை வருத்தத்துடன் ஒத்துக்கொள்ள வேண்டும். மீண்டும் ஒருமுறை இரக்கத்திற்கான மகிழ்ச்சியான அழைப்பை முன்னெடுக்கத் திருஅவைக்கு நேரம் வந்துவிட்டது. இதுவே மூலங்களுக்கு திரும்பிச் சென்று நம் சகோதர சகோதரிகளின் வலுக்குறைவுகள், போராட்டங்கள் ஆகியவற்றை தாங்கும் தருணங்கள். எங்கெல்லாம் திருஅவை உள்ளதோ அங்கெல்லாம் தந்தையின் இரக்கம் தெளிவாகக் காணப்பட வேண்டும்.

**குடும்பங்களில்:** தவற்றை மன்னிக்கும்வரை ஓயாத ஒரு தந்தையாகவும், பரிவுடனும் இரக்கத்துடனும் ஒதுக்கப்பட்டதை வெற்றி கொள்பவராகவும் இருக்கிறார் என்று கூறி கடவுளின் இயல்பை இரக்கத்திற்கான தம் உவமைகளில் இயேசு வெளிப்படுத்தியதை நினைவில் கொண்டு, நமது இதயத்தை அன்பால் நிரப்பி, நம் குடும்பங்களில் மன்னிப்பின் மூலம் ஆறுதலை வழங்க நாம் அழைக்கப்படுகின்றோம்.

**சமுதாயத்தில்:** இப்புனித ஆண்டின் மூலம் நம் சமூகத்தின் கடைசி எல்லையின் விளிம்புகளில் வாழ்பவர்களுக்கு நம் இதயங்களை திறக்கும் அனுபவத்திற்காக நாம் காத்திருக்கின்றோம். தங்கள் குரலை எழுப்ப முடியாதவர்கள் தங்களது உடலில் தாங்கும் காயங்கள் எண்ணற்றவை. இது பணக்காரர், முதலாளிகள், ஆட்சி பொறுப்பில் உள்ள சிலர் ஆகியோரின் அக்கறையின்மையால் அடக்கப்பட்டும் மூழ்கடிக்கப்பட்டும் உள்ளது. அழிவு உண்டாக்கும் வெறுப்பு மனப்பான்மையை தடுத்து, மாண்பு மறுக்கப்பட்ட நம் சமுதாயங்களின் காயங்களையும் அதன் குரலையும் கண்டுணர்வோம். அப்போது அவர்கள் நம் உடனிருப்பின், நட்பின், தோழமையின் அன்பை உணர்வார்கள். அவர்களது அழுகுரல் நமதாகட்டும் அப்போது நாம் அவர்களுடன் இணைந்து தலைவிரித்தாடும் அக்கறையின்மையாகிய தடைகளையும் பொய்முகத்தால் மூடப்பட்ட தன்னலத்தையும் பாசாங்கையும் உடைத்தெறிவோம்.

**தனிப்பட்ட வாழ்வில்:** "உங்கள் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பதுபோல் நீங்களும் இரக்கமுள்ளவர்களாய் இருங்கள்" (லூக் 6:36) - இது மகிழ்ச்சியிலும் அமைதியிலும் வளமார்ந்ததாக இருப்பதால் வாழ்வின் நிகழ்ச்சி நிரலாக இருக்க அழைப்பு விடுக்கிறது. எனவே இரக்கத்தை நாம் பெற தகுதிபெறுமாறு முதலில் நாம் கடவுளின் வார்த்தைக்கு செவிமடுக்க நம்மையே கையளிக்க வேண்டும்.

தம் சொந்த கரங்களால் கடவுளின் பேராற்றலுள்ள இரக்கத்தைத் தொட்டு உணர்வதற்கு வழிவகை செய்யும் ஒப்புரவு அருளடையாளத்தை மீண்டும் ஒருமுறை மையத்திற்கு கொண்டு வருவோம். இதுமட்டுமல்ல மன்னிக்கவும் செய்யவேண்டும். கடவுள் தமது நன்மைத்தனத்தை அளவுகடந்து தாராளமாகப் பொழிந்துள்ளார் என்பதை அறிந்து நாமும் பிறருடன் தாராளமாய் இருக்க வேண்டும்.

**முடிவுரை:** நம் வாழ்வை மாற்றுவதற்கான சரியான தருணம் இதுவே. நம் இதயங்கள் தொடப்பட அனுமதிக்கப்படுதற்கான காலம் இதுவே. நம்மை அடைவதில் கடவுள் ஒருபோதும் சோர்ந்து போவதில்லை. அவர் எப்போதும் கேட்பதற்கு தயாராய் உள்ளார் என்பதை உணர்ந்து மனமாற்றத்திற்கான அழைப்பை ஏற்று திருஅவையால் வழங்கப்படும் இரக்கத்தில் உறுதிப்பாட்டுடன் வாழ்வது சிறப்பு. பலியை அல்ல இரக்கத்தையே விரும்புகிறேன் (ஓசே 6:6) என்ற இறைவாக்கினர் ஓசேயாவின் நூலில் இயேசு தாமே வேண்டுகோளாக வைப்பதை நாம் பார்க்கின்றோம். மேலும் இரக்கத்துடன் இருப்பது நீதிக்கு எதிரானதல்ல. மாறாக ஒருவர் தன்னைத்தானே காண ஒரு புதிய வாய்ப்பு வழங்கவும், மனமாற்றம் பெறவும், கடவுள் தேடிச் செல்லும் வழியாகவும் காணப்படுகிறது. கடவுளின் இரக்கத்தைக் கொண்டாடும் யூபிலி ஆண்டை கொண்டாடிய நாம் ஒருவர் மற்றொருவரை சிறப்பாக அறியவும் புரிந்துகொள்ளவும், மூடிய மனப்பாங்கு, அவமரியாதை ஆகியவற்றின் ஒவ்வொரு வடிவத்தையும் நீக்கி, வன்முறை வேறுபாடு காட்டுதல் ஆகியவையை விரட்டுவோம். சிலுவையில் அறையப்பட்டு உயிர்த்தவரின் தாய் மரியாள் அவரது அன்பின் மறைபொருளில் மிக நெருக்கமாகப் பங்கேற்ற காரணத்தால் இறை இரக்கத்தின் திருப்பீட முற்றத்துக்குள் நுழைந்தவரானார். இறைமகனின் இரக்கம் எல்லை ஏதுமின்றி எவ்வித விதிவிலக்குமின்றி ஒவ்வொருவரையும் சென்றடைகிறது என்பதற்கு அன்னை மரியா ஒரு சான்றாக உள்ளார். இறையிரக்கத்தின் ஆழத்திற்குள் நுழைய அழைக்கப்பட்ட அன்னை மரியாள், கடவுளின் இரக்கத்திற்கு ஏற்ப நமக்காக பரிந்துபேசி இறையருளைப் பெற்றுத்தர மன்றாடுவோம்.

"ஆண்டவரே, உமது இரக்கத்தையும் உமது பேரன்பையும் நினைத்தருளும்: ஏனெனில் அவை தொடக்க முதல் உள்ளவை" (திப 25:6)

## 2. திருவருகைக் காலம் - தயாரிப்புக்களும் சவால்களும்

திரு. லூயிஸ் சகாயராஜ்

திருச்சபையின் திருவழிபாட்டுக் கால அட்டவணையின் தொடக்கமாக அமைந்திருப்பது திருவருகைக் காலமாகும். நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் பிறப்புக்காக தயாரிக்கும் காலமான இத்திருவருகைக்காலம் இயேசுவின் இரண்டாம் வருகைக்காக நம்மைத் தகுதியுள்ளவர்களாக்கிட அழைக்கிறது. இதற்காக நான்கு வாரங்கள் நம்மை நாமே தயாரித்துக் கொள்ள கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஆண்டும் திருவருகைக்காலத்தில், ஆலயத்தில் தயாரிப்புக்குரிய மெழுகுவர்த்திகள் ஏற்றப்பட்டு தியானக் கருத்துரைகள் வழங்கப்பட்டு படிப்படியாக கிறிஸ்து பிறப்பை எதிர்நோக்கி நாம் வழிநடத்திச் செல்லப்படுகிறோம். இத்தயாரிப்புகள் உண்மையில் பலன்தரும் வகையில் நம்மை ஆட்கொள்கின்றனவா? நம்மை ஆய்ந்து பார்ப்போம்.

*சில தயாரிப்பு வழிமுறைகளை நாம் முயற்சி செய்து பார்ப்போம், வாருங்கள்.*

**விழித்திருப்பு:** "நீங்கள் நினையாத நேரத்தில் மானிட மகன் வருவார்" உலகில் மிகமிக அதிகமாக செலவு செய்யப்படும் நாட்கள் காலங்கள் எனக் கணக்கிட்டுப் பார்த்தால் அதில் முதலிடம் பெறுவது கிறிஸ்துமஸ் காலம். ஆம், ஆடைகள், ஆபரணங்கள், அன்பளிப்புகள், பரிசுகள், விருந்து, கேளிக்கை, பயணம், அலங்காரம் என எண்ணற்ற செலவுகளை செய்து மகிழ்ந்திருக்கும் காலமாக கிறிஸ்துமஸ் காலம் மாறிப்போய்விட்டது. எளிமையில், ஏழ்மையில், வெறுமையில் அவதரித்த நம் மீட்பரின் பிறப்பு விழாவை நாம் எத்துணை ஆடம்பரமாக நினைவு கூர்கிறோம். ஏன் இந்த முரண்பாடு?

கடவுள் தன்மையில் விளங்கிய அவர் தன்னையே தாழ்த்தி நமக்காக நம் உருவைத் தாங்கினார் எனில், நாம் அவரது நிலையை பின்பற்றாமல், நமது ஆடம்பரக் கொண்டாட்ட மனநிலைக்கு அவரை வற்புறுத்தி அழைக்கிறோம். இது அடிப்படையில் மிகப்பெரிய மோசடியாக வியாபாரமாக மாறிப்போகும் நிலையல்லவா?

கிறிஸ்து பிறப்புக்காக எதிர்பார்த்து நம்மைத் தயாரிக்க நாம் முயற்சி செய்கிறோமே நாம் (நாங்கள்) நினையாத நேரத்தில் மீட்பர் வருவாரெனில் வந்தாரெனில் என்ன செய்வோம்... நாம் செய்த, செய்யும் தயாரிப்புகள் என்னவாகும்? விழித்துக்கொள்வோம்.

**தயாரிப்பு:** "ஆண்டவருக்காக வழியை ஆயத்தமாக்குங்கள்." இன்றைய தொழில்நுட்பக் கலாச்சாரத்தில் நம் வழியையே நம்மால் சீர்ப்படுத்த முடியாமல், போராடிக் கொண்டிருக்க, ஆண்டவருக்காக எப்படி வழியை ஆயத்தமாக்குவது? மனித மனங்களில், நிஜமான நினைவுகள் மறைந்துபோய், பொய்யான பிம்பங்கள் பெருகிவரும் இக்காலத்தில் இது ஒரு மிகப்பெரிய சவாலாகும். நாம் நம்மில், நம்மவரில் கடவுளைக் காணவில்லையென்றால், காலங்காலமாய் கொண்டாடும் கிறிஸ்துமஸ் வீணே.

உலகத்தையே விரல் நுனியில் உரசிப்பார்க்கும் இக்காலத்தில் உலகமீட்பரின் மீட்புச் செய்தியையும் ஒரு சராசரி செய்தியாக மாற்றிவிடுகிறோம். Online ஆடம்பரங்கள், பணம் மட்டுமே ஆதாரமாக மாறிப்போன வாழ்க்கை முறைகள், தள்ளுபடி பொருட்களில் தரம் குறைவாக இருக்கும் எனத் தெரிந்தும் அவற்றை வாங்கிக் குவிக்கும் மோகம், அதே தரத்தோடு ஆண்டவரை அணுகும் வணிக மனநிலை என நம் வாழ்க்கை கரடு முரடாக, காய்ந்த சருகாக ஏற்றத் தாழ்வாக, கோணல், பள்ளத்தாக்காக, முரண்பட்டு, நம்மையும் வீழ்த்தி, பிறரையும் வீச்சியுறச் செய்கின்றது.

இத்திருவருகைக் காலம் நம்மில் சமத்துவ, சமதர்ம நிலையை உருவாக்கினால் அர்த்தமுள்ளதாகும். நாம் தயாரா?

**எச்சரிப்பு:** "நம்பிக்கை குன்றியோராய் அல்ல, நம்பிக்கையில் மிகுந்தோராய் வாழ." கடவுள் நம்மை படைக்கும்போது அவர் நினைத்திருந்தால் விலங்காகவோ, மிருகங்களாகவோ, புழுவாகவோ, பூச்சியாகவோ படைத்திருக்கலாம். ஆனால் அவரது சந்நிதியிலிருந்து நாம் விழுந்தபோது, அவரது நம்பிக்கையின் அடையாளமாக மனித உருவில் நம்மை வார்த்தெடுத்தார். என்னே அவரது பேரன்பு. இந்த மாபெரும் அன்பை அலட்சியம் செய்துவிட்டு உணராமல் உலக பெருமைக்கு இடமளித்து இறைவனின் சாயலை கறைப்படுத்திக் கொள்ளும்போது இறைவன் எச்சரிப்பு விடுக்கிறார்.

திருவருகைக்காலத்தில் நமது தனிப்பட்ட வாழ்வில் மாற்றம் காண நம்மை தயாரிப்போம். நம்மிலுள்ள அவநம்பிக்கைகளை அகற்றிடுவோம். இருள் சூழ்ந்த இதயத்தில் நம்பிக்கை சுடராக அன்பின் ஒளியை ஏற்றிடுவோம். அதை அணையாமல் காக்க நம்மை ஆண்டவரின் அடைகாப்பில் வைப்போம். விளம்பரப்படுத்தி ஆதாயம் பார்க்கும் அர்த்தமற்ற வாழ்க்கையை விலக்கிவிட்டு, வித்தியாசமான விசுவாசிகளாய் நம்மை அடையாளப்படுத்துவோம்.

நமக்கு கிடைக்கும் வாய்ப்பைப் பயன்படுத்தி நம் வாழ்வை நற்செய்தியாக்குவோம். நம்மில் ஏற்படும் சஞ்சலங்களை போராட்டங்களை பொறுமையோடு அணுகி, தூய சூசையப்பரைப்போன்று இறை நம்பிக்கையால் அவற்றில் வெற்றி காண்போம். ஆண்டவரின் வருகையில் மாசற்றோராய் அவர் நம்மைக் காணுமாறு நம் வாழ்வை மாற்றிடுவோம். மனம் மாறிடுவோம்.

**காத்திருப்பு:** "ஆண்டவர் தாமே உங்களுக்கு ஓர் அடையாளத்தை அருள்வார்" கடவுளின் அருளைத் தேடி ஆலயங்களுக்கும், திருத்தலங்களுக்கும் தியானக் கூட்டங்களுக்கும் மாறி மாறிச் செல்லும் நம்மால் அருளை அடைய முடிகிறதா? கடவுளின் அருளைப் பெற வேண்டுமானால் நம் மனதை இதயத்தை ஆன்மாவை அவரிடம் ஒப்புவித்து அலைபாயவிடாமல் வாழ்ந்தாலே போதும். நம்மால் முடியுமா?

ஒவ்வொரு நாளும் நம்மில் இறையருள் புதுப்பிக்கப்படுவதை நாம் என்று உணர்கிறோமோ அன்று திருவருகைக்காலம் நம்மில் பயனுள்ளதாய் அமையும். இறைவனின் அருள் நம்மில் பொழியப்படவும், புதுப்பிக்கப்படவும் நாம் அவரை எதிர்ப்பார்த்துக் காத்திருப்போம்.

**நாம் எதற்காக காத்திருக்கிறோம்?**

அன்றாட வாழ்வில் காத்திருப்பு எப்போது நிறைவேறும் என்று காத்திருக்கிறோம். விலை எப்போது குறையும், நகை எப்போது வாங்கலாம் எனக் காத்திருக்கிறோம். திருமண வயதாகியும் எப்போது வரன் கிடைக்கும் எனக் காத்திருக்கிறோம். திருமணமாகியும் குழந்தைப்பேறு எப்போது கிடைக்கும் எனக் காத்திருக்கிறோம். விளம்பரம் எப்போது முடியும் தொலைக்காட்சி தொடர் காணக் காத்திருக்கிறோம். இப்படி அன்றாடம் பலவற்றுக்காகக் காத்திருக்கும் நாம், நம் வாழ்வை மாற்றக்கூடிய ஓர் அடையாளத்தைக் காணுமாறு காத்திருப்போம். "இம்மானுவேல்" என்ற அந்த அடையாளத்தை கடவுள்

நமக்கு இரட்சிப்பின் அடையாளமாக அருள்வார். அதன் வழியாக தமது உடனிருப்பை நம்மில் தங்கிடச் செய்வார். எதிர்பார்த்து ஏமாந்து போவதைவிட காத்திருந்து கடவுள் அருளைப் பெறுவதற்கு நாம் தாயாராவோம்.

## திருவருகைக் காலம் - பொருளும் அருளும்

திருமதி. டிலைலா சேவியர்

திருவருகைக்காலம், தவக்காலம், பாஸ்கா காலம் மற்றும் பொதுக்காலம் என வழிபாட்டு காலங்களை பிரித்து, இந்த நான்கு காலங்களையும் அர்த்தமுள்ளதாகவும் பக்தியோடு திருச்சபை கொண்டாடி வருகிறது. இவைகளில் திருவருகைக் காலம் என்பது,

1. கிறிஸ்து அரசரின் விழாவிற்கு பின் தொடங்கி கிறிஸ்து பிறப்புவரை நான்கு வாரங்களில் கொண்டாடப்படுகிறது.
2. திருவருகைக்காலம் மகிழ்ச்சியோடும், நம்பிக்கையோடும் இயேசு கிறிஸ்துவின் பிறப்பை எதிர்நோக்கியிருக்கும் காலம்
3. "வார்த்தை மனுவுருவானார் நம்மிடையே குடிகொண்டார்" என்ற வாக்குத்தத்தம் நிறைவேறும் காலம்
4. கடவுளோடு நமக்குள்ள முறிந்த உறவை மீண்டும் புதுப்பிக்கும் காலம்
5. நம்முடைய பாவங்களுக்காக மனம் வருந்தி தவமுயற்சிகளும் வாழ்வினை வாழ அழைப்பு விடுக்கும் காலம்.
6. நம் உள்ளங்களிலும் இல்லங்களிலும் இயேசுவை ஏற்றுக்கொள்ள நம்மை தயாரிக்க அழைப்பு விடுக்கும் காலம்.
7. நம்மிலும் உலகிலும் நீதியையும் சமாதானத்தையும் நிலைநிறுத்த சவால் விடும் காலம்

திருவருகைக்காலங்களில் நாம் இறைவனின் அன்பையும் இரக்கத்தையும் பெறுகிறோம். எப்படியெனில் பழைய ஏற்பாட்டுக் காலங்களில் மக்கள் பாவத்தாலும், துன்ப துயரங்களினாலும் அமைதியான வாழ்வினை இழந்து மீட்புக்கிடைக்காதா என்று ஏங்கியிருந்த நேரத்தில் இறைவன் மக்கள்மீது மனமரங்கி "உங்களை இட்சிக்க ஒரு மனுக்குமாரனை அனுப்புவேன்" என்ற வாக்குறுதிகள் நிறைவேறும் காலம். இவ்வாறு இறைவன் நமக்களித்த கிருபைகளையும் அருள் வரங்களையும் எந்த விதத்தில் பயன்படுத்தியுள்ளோம் என்றும், நம்மிடையே உண்மையான மனமாற்றமும் புதுவாழ்விற்கு தகுந்த தயாரிப்பும் காணப்படுகிறதா என்று சிந்திக்க இந்நாட்களில் அழைக்கப்பட்டுள்ளோம்.

"ஆண்டவருக்காக வழியை ஆயத்தப்படுத்துங்கள், அவருக்காக பாதையை செம்மையாக்குங்கள், பள்ளத்தாக்குகள் எல்லாம் நிரப்பப்படும், மலை குன்று யாவும் தாழ்த்தப்படும். கோணலானவை நேராக்கப்படும், கரடுமுரடானவை நேராக்கப்படும். மனிதர் அனைவரும் கடவுளின் மீட்பைக் காண்பர்" (லூக் 3: 4-6) என்னும் இறைவாக்கு நம்மை உண்மையான மனமாற்றத்திற்கும் கிறிஸ்துவின் பிறப்பிற்கு தயாரிப்பதற்கும் நம்மை அழைக்கின்றது. இத்தயாரிப்பினை நம்மிடையே பொறாமை, பிறரை ஏற்றுக்கொள்ளாமை போன்ற தீமையான எண்ணங்களை அகற்றி அன்பு, மன்னிப்பு, சமாதானம், பொறுமை, கனிவு, பணிவு இரக்கம் போன்ற நன்மையான செயல்களால் நம்மை நிரப்புவோம்.

**திருவருகைக் கால மெழுகுவர்த்திகளை ஏற்றும் வழிமுறை**

முதல் வார செபம்

ஒரு: தந்தை, மகன், தூய ஆவியின் பெயராலே

எல்: ஆமென்.

ஒரு: ஆண்டவர் பெயரால் நமக்கு உதவி உண்டு

எல்: அவரே விண்ணையும் மண்ணையும் படைத்தவர்

முதல் வாரம்: தொடக்கவுரை

இது நம்பிக்கையின் மெழுகுவர்த்தி. இது மீட்பரின் வருகைக்காக காத்திருந்த நம் முதுபெரும் தந்தையர்களான - ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோரைக் குறிக்கின்றது. "கவனமாய் இருங்கள், விழிப்பாய் இருங்கள். ஏனெனில் அந்நேரம் எப்போது வருமென உங்களுக்கு தெரியாது" மாற்கு 13: 33. ஆண்டவர் நம்மை விழிப்புடன் காத்திருக்கும்படி கேட்கின்றார். ஆனால் நாமோ உலக

கவலைகளிலும், உலக கவர்ச்சிகளிலும் நம் மனங்களை செலுத்தி வாழ்ந்து வருகிறோம். இனியாவது "ஆண்டவரே பேசும், அடியான் கேட்கிறேன்" என்று கூறி அவரின் வருகைக்காக நம்மையே ஆயத்தப்படுத்துவோம்.

திரியை ஏற்றுதல்: குழந்தைகளோ அல்லது பெரியவர் ஒருவர் ஏற்றலாம்

வாசகம்: எசாயா 60: 2-3

செபம்: இம்மானுவேலே, இயேசு கிறிஸ்துவே, எல்லா நாடுகளும் எதிர்பார்க்கும் ஆண்டவரே, அனைத்து

மக்களின் மீட்பரே வந்து எங்களிடையே தங்கும்.

எல்: பரலோகத்திலிருக்கின்ற...

பாடல்: (பொருத்தமான திருவருகைப் பாடல் ஏதாவது)

ஒரு: தந்தை, மகன், தூய ஆவியின் பெயராலே

எல்: ஆமென்.

## 3. புனிதர்கள் பலவிதம் ஒவ்வொருவரும் ஒருவிதம்

திரு. புல்லோன் ஜோ லூயிஸ்

நம்மைப்போல் வாழ்ந்த சாதாரண மனிதர்கள் தான் இன்று நாம் போற்றும் புனிதர்கள். புனிதர்கள் யாரும் விண்ணிலிருந்து தோன்றியவர்கள் அல்ல. அவர்கள் மண்ணிலிருந்து விண்ணேறியவர்கள்தான். இறைவன் தூயவராக இருக்கின்றார். எனவே நாமும் தூயவராக இருக்க வேண்டும் என்று விரும்புகிறார். (1பேதுரு 1:16) இவ்வுலகில் அவர் படைத்த ஒவ்வொருவரையும் தூய வாழ்வு வாழ்வதற்கு மட்டுமே அழைத்துள்ளார் (1தெச 4:7) அவரது அழைப்பை ஏற்று தூய்மையாக வாழ்ந்தவர்கள்தான் நம் புனிதர்கள். சொல்லப்போனால் கிறிஸ்துவைப் போன்று நடந்தவர்கள் கிறிஸ்துவைப்போல் நம்மையும் வாழத் தூண்டியவர்கள் (1கொரி 11:1)

மனித வாழ்வு என்பது ஒரு பயணம். பயணத்திற்கு பல பாதைகள் உண்டு. பழக்கப்பட்ட பாதையையே பலரும் தேர்வு செய்வர். இப்பயணப் பாதையானது கரடுமுரடான சஞ்சலங்களும், சவால்களும் நிறைந்த வித்தியாசமான பாதை. இவ்வித்தியாசமான பாதையில் வித்தியாசமாக வாழ்ந்தவர்களையே திருச்சபை புனிதர்கள் என அழைக்கிறது. தங்கள் வாழ்வை அர்த்தமுள்ளதாக மாற்றியதற்காக திருச்சபை தருகின்ற பரிசே அந்த புனிதர் பட்டங்கள். புனித வாழ்வு நடத்த துறவு என்ற நிலையிலிருந்து கள்வனின் தலைவன், நல்ல கள்வன் வரையில் புனிதர்கள் எல்லோரும் ஒரே விதம் அல்ல.

பாவங்களிலிருந்து விடுவிக்கப்பட்டு படைத்தவன் அருளைப் பெற்றவர்கள். விண்ணகத் திருக்கூட்டத்தில் வாழ்பவர்கள். திருச்சபையின் விலையேறப்பெற்ற உறுப்பினர்கள். பல்லாயிரம் மைல்கள் பயணம் செய்து, பகலவன் கிறிஸ்து என்று பறைசாற்றி, பாருக்கு உணர்த்துவதைப் பணியென ஏற்றவர்கள். மனிதர்களாக இருந்து மகிமையின் கிறிஸ்துவுக்குள் தூய வாழ்வு வாழ்ந்த தூதுவர்கள். கயமை முகமூடியைப் கிழித்தெறிய சமூக வாழ்வின் அச்சாணியானவர்கள். காலத்தைக் கடந்த கலிலேயனின் கனவை நனவாக்கியவர்கள். மரித்தோர் உத்தானத்தையும், மறு உலக வாழ்வையும் எதிர்பார்க்கிறேன் என மறுஉலக வாழ்வை முன்னரே மகிழ்ந்து சுவைத்தவர்கள். இயேசு கிறிஸ்துவின் விழுமியங்களை இவ்வுலகம் முழுவதும் எடுத்துச்செல்ல விருட்சமாகிப் புறப்பட்டவர்கள்.

நற்செய்திப் பணியை நல் வழிகாட்டுதல் பணியை தலைமைத்துவ பணியை தடம் பிறழாமல் முழுமை செய்தவர்கள் கடுமையான செப தப ஒறுத்தல் வாழ்வில் கடவுளோடு ஒன்றித்து வாழ்ந்தவர்கள். அமைதியின் தூதுவனாய் வலம் வந்தவர்கள். பிறரன்பு சேவை செய்தவர்கள். விசுவாசத்திற்காய் மறைசாட்சியாய் மரணம் அடைந்தவர்கள். தாழ்ச்சியை அடையாளமாய்க்கொண்டு பணிபுரிந்தவர்கள். தியாகத் தழும்புகளைத் தாங்கியவர்கள். சிறைப்பட்டோர், ஒடுக்கப்பட்டோர், ஒதுக்கப்பட்டோர் இவர்களை விடியலுக்கு இட்டுச் சென்றவர்கள். விண்ணகச் செல்வங்களை இம்மண்ணில் வாழும்போதே சேகரித்துக் கொண்டவர்கள். இறைவன்முன் அமர்ந்திருக்கும்போது பேறுபெற்றவர்கள்.

அனைத்துப் புனிதர்களும் இந்த இறைப்பணியைத்தான் செய்தார்கள். இவர்கள் எல்லோரும் ஒரே விதம் அல்ல, இவர்கள்தாமே பலவிதம்.

- மனந்திரும்பி நற்செய்தியை நம்புங்கள் என்று அறைகூவல் விடுத்து தன் இரத்தத்தை சிந்திய தூய திருமுழுக்கு யோவான் இயேசுவின் பணி வாழ்விற்குப் பாதை அமைத்தவர்.
- உலகெங்கும் நற்செய்தியை அறிவியுங்கள் என்ற இயேசுவின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, அவரின் போதனைகளை இந்தியாவிற்குக் கொண்டுவந்து இரத்த சாட்சியாக மரிக்கும் பாக்கியம் பெற்ற தூய தோமையார் இவர் இயேசுவின் திருத்தூதர்.

- தப்பறைக் கொள்கைகளைத் துணிவுடன் கண்டித்து, நற்கருணை சிறு பிள்ளைகளுக்கு அவசியம் தேவையென போதித்து புனித வாழ்வு நடத்திய நற்கருணையின் தந்தை தூய 10ம் பத்திநாதர் ஒரு திருத்தந்தை.
- இவரின் தந்தை, தாய், தந்தையின் பெற்றோர், இவரின் சகோதரர்கள், சகோதரி என புனிதர்களின் குடும்பத்தில் புனிதரானார் இவரும். மருத்துவமனை நிர்வாகத்தின் பாதுகாவலர். "தன் தேவைக்கு அதிகமான எதுவும் தனக்குரியதல்ல" என்று வாழ்ந்து காட்டியவர். மருத்துவமனைகள், முதியோர் இல்லங்கள் நிறுவிய தூய பெரிய பசிலியார் ஒரு மறைவல்லுநர் ஆயர்
- குருடர்களுக்கு விடுதி, ஏழைகளுக்கு உணவு, தவறியப் பிறகு திருந்திய பெண்களுக்கு பாதுகாப்பு, புனித பூமியை மீட்கப் போர் புரிந்தவர், பணக்காரர்கள் விண்ணரசில் நுழைவது மட்டுமல்ல, புனிதராகி மாண்புடன் நுழையலாம் என சான்றாகி நின்ற தூய லூயில் பிரான்சு நாட்டின் அரசர்.
- "தூய ஆவியானவரின் அருட்கொடைகளைப் பெற்ற பெரும்மேதை என்றே பாராட்டப்பட்டவர். பட்டி தொட்டியெல்லாம் மறையுரை நிகழ்த்தி பலரையும் மனந்திரும்பச் செய்தவர். உடல் அழிந்தும் அழியாத நாவினைப் பெற்ற தூய அந்தோணியார் ஒரு அரச குடும்பத்தவர்.
- ஆன்மாக்களே வேண்டும், வேறொன்றும் வேண்டாமென ஆர்த்தெழுந்த ஆன்மீகவாதி கல்வியாளர், நன்றே செய்திரு. நல்லாயன் வழியில் நடந்திடு என்று இளைஞர்களுக்கு வாழ வழிவகுத்த இளைஞர்களின் திருத்தூதர் தூய தொன்போஸ்கோ ஒரு குருவானவர்.
- கருப்பையிலல்ல தூய தொன்போஸ்கோ குவலயத்திற்கு உணர்த்திய ஆன்மீகம் என்பது வாசித்து சொல்வதல்ல வாழ்ந்து சொல்வதே என்று கடைகோடி மக்களுக்காய் கடைசிவரை மூச்சுவிட்ட தூய அன்னை தெரேசா ஒரு கருணையின் தாய்.
- ஆண்டவரின் இல்லத்தில் நுழைய அனைத்து துன்பங்களும் ஒரு திறவுகோல் என முப்பத்தைந்து ஆண்டு வாழ்வில் பல வியாதிகளின் பாதிப்பினூடே சிறு பறவையின் ஓசையற்ற சீர்மிகு பயணம்போல் அதிவேக அம்பாக ஆண்டவரின் இதயத்தை ஊடுருவிய முதல் இந்தியப் புனிதை அல்போன்சா ஒரு கன்னியர்.
- ஆரம்ப கல்வி மட்டுமே அவருக்கு ஐந்து ஆண் மக்களுக்கு தாய். அடுப்படிபோதும் என்ற அடக்கு முறை சமுதாயத்தை எதிர்த்து, பெண்கல்வி பற்றி பேசுவதே பாவம் என்ற காலத்தில் பெண்களுக்குக் கல்வி என பள்ளிகளை ஆரம்பித்த, புனித அன்னாள் சபையை நிறுவிய ஞானம்மா, துறவுகோலம் பூணாத ஒரு விதவைப் பெண்.
- தியோக்ளேஷியன் மன்னன் ஆசையை நிராகரித்து, இயேசுவைத் தெரிந்துக்கொண்டு, அவரை மட்டுமே நேசிப்பது ஒரு ஆன்மாவின் கன்னிமை என்றவர். இயேசுவைப் போலவே வதைக்கப்பட்டு, கசைகளால் அடிக்கப்பட்டு, அம்புகளால் எய்து, தொண்டையைப் பெரும் ஈட்டியால் குத்தி சாகடிக்கப்பட்ட தூய பிலோமினா 12 வயது சிறுமி.
- "பாவம் செய்வதைவிட சாவதேமேல்" கீழ்படிவதே சிறந்த ஒறுத்தல் என்று தன் இளம்வயதிலேயே இறைவன் மகிமைவிட வாழ்ந்துகாட்டிய பீடச்சிறுவர்களின் பாதுகாவலர் தூய தோமினிக் சாவியோ 15வயது சிறுவன்
- இறைவனுக்காய்ப் பணிந்து ஏற்றுக்கொண்டால், எத்தொழிலும் தாழ்வானதல்ல என்றே செய்தவர். அறிமுகமில்லாதவர்கள் பயணிகள் இவர்களுக்கு அவரது இல்லம் எப்போதும் திறந்திருக்கும். இவர்தானே தன்னைக் கொல்ல வந்த, கிறிஸ்தவர்களுக்கு எதிரான உரோமையர்க்கே உணவளித்து, இளைப்பாற செய்து, அந்த இரவிலேயே தனக்கென சவக்குழி தோண்டி இறைவனில் இணையத் தன்னைத் தயாரித்துக்கொண்ட தூய போக்காஸ் ஒரு தோட்டக்காரன்.
- 12 வயது முதல் 60வயது வரை சுறுசுறுப்பானவளாயிருந்தவள். தனக்குக் கிடைத்த அனைத்தையும் இல்லாதோர், ஏழைகளுக்குப் பகிர்ந்தளித்து, சிறைப்பட்டோரைச் சந்தித்து மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களுக்காய் மன்றாடி பிறரன்பு மற்றும் செபவாழ்வில் கழித்த தூய ஜித்தா ஒரு பணிப்பெண்.
- பூமியிலுள்ள எதுவும் திடீர் மாற்றத்திற்குட்பட்டதல்ல. ஒவ்வொன்றிற்கும் ஒரு நேரம் இருக்கிறது. விதை நிலத்தில் ஊன்றுவது முதல் அது காய்த்துப் பலன் தருவதற்குள் எத்தனை பரிமாணங்களைக் கடக்கிறது. அதுபோலத்தான் ஆன்மீக வாழ்வும் என்று தன் வாழ்வையே முற்றிலுமாய் மாற்றி அமைத்துக்கொண்ட துறவியான தூய மோசஸ் தி பிளாக் ஒரு கொள்ளைக்கூட்டத் தலைவன்.
- இன்றே என்னோடு வான்வீட்டில் இருப்பாய் என்று இயேசு தம்மோடு இணைத்துக்கொண்ட தூய தீஸ்மாஸ் ஒரு நல்ல கள்ளன்.

இப்படியாக புனிதர்கள் பலவிதமாக இருக்கின்றனர். ஆனால் பலரும் ஒரேவிதம். அனைத்துப் புனிதருக்கும் உயர் பண்புகள் விசுவாச வாழ்வு எனும் போராட்டத்தில் ஈடுபட்டு, அதற்காகப் பல இன்னல்கள் அனுபவித்தவர்கள். ஆனால் நிறை வாழ்வைப் பற்றிக்கொண்டவர்கள் இந்த மண்ணில், உலகில் சாட்சிய வாழ்வு வாழ்ந்து இறந்தும் வாழ்கிறார்கள்.

ஒருமுறை அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கனின் செயலர் அவரிடம் கடவுள் நம்மோடு இருக்க நமக்குத்தான் வெற்றி என்று ஆறுதல் சொன்னார். அதற்கு ஆபிரகாம் லிங்கன் நண்பா, கடவுள் நம்மோடு இருக்கிறார் என்பது தெரியும். ஆனால் நாம் கடவுளோடு இருக்கிறோமா? என்பதுதான் கவலை என்றார். ஆம் நாம் இறைவனோடு இணையும்போது தான் புனிதம் அடைவோம் (யோவா15:5). இன்றைய உலகம் சவால் நிறைந்தது, இதில் நாம் இயேசுவின் மதிப்பீடுகளை நமதாக்கிக்கொள்வது எளிதானதல்ல, ஆனால் இதிலேதான் நம் புனிதம் அடங்கியுள்ளது, நம்மை இழப்போம், கிறிஸ்துவில் இணைவோம். விண்ணகச் செல்வங்களையே தேடுவோம், புண்ணிய வாழ்வு வாழ்ந்து இயேசுவுக்காகவும், மக்களுக்காகவும் இனிதே வாழ்வோம், மண்ணக மாயைகளைப் புனிதர்களின் துணை வேண்டி வெல்வோம். சிறப்பான வாழ்வு வாழ்வோம். விலை மதிப்புள்ளதாக மாற்றுவோம். புனிதர்களாக மாறுவோம்.

## 4. இறந்தோர்க்காக செபிக்கும் ஆன்மீகம் - ஒரு புரிதல்

திரு. ஜான் சுரேஷ்

இறந்தவர்களுக்காக செபிப்பதும் அவர்களின் பாவம் மன்னிக்கப்பட பலி செலுத்துவதும் மிக ஆரம்பக் காலத்திலிருந்தே நடைமுறையில் உள்ள ஒன்று (2மக் 12:42-46). கிறிஸ்து இயேசுவின் மறையுடல் முழுவதும் கொண்டுள்ள இவ்வொன்றிப்பை விருப்பமுடன் ஏற்று, கிறிஸ்தவ சமயம் தொடங்கிய காலத்திலிருந்தே வழிப்போக்கர்களின் திருச்சபை இறந்தவர்களின் நினைவை வணக்கத்தோடு கொண்டாடி வந்துள்ளது. (திருச்சபை எண் 50)

தங்களது மூதாதையரை அவர்களது நினைவு நாளில் நினைவு கூர்ந்து அவர்கள் வழியாக ஆசீர் பெறும் மரபு ஏறக்குறைய எல்லா மதத்தினரிடமும் உண்டு. இருப்பினும் கிறிஸ்தவர்கள் இன்னும் ஒரு படி மேலே போய் இறந்தவர்களுக்காக தாங்கள் செபிக்கின்றபோது அவர்களின் ஆன்மா இறைவனில் நித்திய இளைப்பாற்றுதல் அடையும், அவர்கள் செய்த பாவங்கள் மன்னிக்கப்படும் என்று நம்பினார்கள். அதுமட்டுமல்ல, இறந்தவர்கள் தங்களுக்காக இறைவனிடம் பரிந்துபேசி, நாம் வாழ்வு பெற உதவி செய்வார்கள் என்று மிகுந்த உறுதியுடன் இருந்தார்கள்.

இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கம் இதை உறுதி செய்தது. "கிறிஸ்துவின் அமைதியில் துயில்கொண்ட சகோதரர் சகோதரிகளுக்கும் வழிப்போக்கர்களாகிய நமக்குமிடையே உள்ள ஒன்றிப்பு சிறிதும் அறுந்துவிடவில்லை. மாறாக, திருச்சபையின் நிலையான நம்பிக்கையின்படி அருள் நலன்களைப் பரிமாறிப் பகிர்ந்து கொள்வதன் வழியாக இவ்வொன்றிப்பு உறுதிப் பெறுகின்றது.

நவம்பர் இரண்டாம் தேதி கொண்டாடக் காரணம்: ஏறக்குறைய 962ம் ஆண்டு குளுனியில் பிறந்த துறவி தூய ஒடில்லோ தமது துறவு மடத்தில் நவம்பர் 2ம் தேதி இறந்தவர்கள் அனைவருக்காகவும் ஒப்புக்கொடுத்து செபிக்கும் முறையை உருவாக்கினார். இந்த செபமுறை எல்லா இடங்களுக்கும் அடுத்தடுத்து பரவி ஐரோப்பா முழுமைக்கும் விரிவடைந்தது. 14ம் நூற்றாண்டு முதல் கத்தோலிக்கத் திருச்சபை முழுவதும் இந்நாள் கொண்டாடப்படுகிறது. ஒருநாளில் முடிந்துபோகும் ஒன்றாக இல்லாமல் நவம்பர் மாதம் முழுவதும் இறந்தவர்களுக்காக மன்றாடுகிற மாதமாக தற்போது மாறியிருக்கிறது.

முதல் உலகப்போரில் எண்ணற்றோர் இறந்ததை நினைத்து திருத்தந்தை 15ம் ஆசீர்வாதப்பர் வருந்தினார். 1915ம் ஆண்டு இம்முறையை சிறிது மாற்றி "இறந்த கணக்கற்ற வீரர்களுக்காக, ஏற்கனவே இறந்தவர்களுக்காக, யாரும் நினையாத ஆன்மாக்களுக்காக திருப்பலி ஒப்புக்கொடுங்கள்" என்று அறிவுறுத்தினார். இதுவே இம்மரபின் வரலாறாகும்.

## 5. திருச்சபை செய்திகள்

சகோ. சுரேஷ் இயேசுபாலன் சச.,

1. திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இந்தியாவுக்கு வருகை தருவது குறித்து அவர் வெளியிட்டுள்ள விருப்பம், இந்திய கத்தோலிக்க சமுதாயத்தை மிகுந்த மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது என்று இந்திய ஆயர் பேரவைத் தலைவர் கர்தினால் Baselios Mar Cleemis அவர்கள் இந்திய ஊடகத்தினரிடம் கூறினார். இந்திய ஆயர்கள் கடந்த ஆண்டிலிருந்தே திருத்தந்தையை அழைத்து வந்துள்ளனர் என்றும் தற்போது அவர் தன் விருப்பத்தைத் தெரிவித்திருப்பதால் இனி அதிகாரப்பூர்வ வழிமுறைகளை இந்திய அரசுடன் இணைந்து மேற்கொள்வோம் என்றும் கர்தினால் Cleemis அவர்கள் கூறியுள்ளார். இந்திய அரசின் அதிகாரப்பூர்வ அழைப்பு வத்திக்கானை அடைந்ததும், இரு தரப்பினரும் கலந்துபேசியபின் இந்த பயணத்தின் விவரங்கள் வெளியிடப்படும் என்று கர்தினால் Cleemis அவர்கள் எடுத்துரைத்தார்.

2. திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், புதிதாக 17 கர்தினால்களை வருகின்ற நவம்பர் 19 தேதி நியமனம் செய்ய உள்ளார். இவர்களில் 13 பேர் 80 வயதிற்குட்பட்டவர்கள் மற்றும் புதிய திருத்தந்தையை தேர்ந்தெடுக்கும் தகுதி பெற்றவர்கள். இவர்களை, திருத்தந்தை பிரான்சிஸ் உலகின் 5 கண்டங்களில் இருந்து தேர்வு செய்துள்ளார். ஆசியா கண்டத்திலிருந்து மூவர் கர்தினால் நிலைக்கு உயர்த்தப்பட உள்ளனர், என்பது குறிப்பிடத்தக்கது.

3. 2018ம் ஆண்டு அக்டோபர் மாதம் உலக ஆயர்களின் 15வது மாமன்றம் வத்திக்கானில் நடைபெறும் என்றும், இந்த மாமன்றத்தில் இளையோரை மையப்படுத்தி கருத்துப் பரிமாற்றங்கள் நடைபெறும் என்றும், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அறிவித்துள்ளார். "இளையோர், நம்பிக்கையும் அழைத்தலைத் தேர்ந்து தெளிதலும்" என்பது ஆயர் மாமன்றத்தின் மையக் கருத்தாக அமையும் என்றும், உலகின் ஆயர் பேரவைகள் கீழை வழிபாட்டு முறை தலத்திரு அவைகள் துறவு சபைகளின் உலகத் தலைவர்களின் ஒன்றியம் ஆகிய அனைத்தையும் கலந்துபேசி இந்த மையக் கருத்து தெரிவு செய்யப்பட்டுள்ளது என்றும் திருத்தந்தை அறிவித்துள்ளார்.

4. ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் அண்மையில் இடம்பெற்ற வன்முறையில் காயமடைந்தவர்களுக்கு உதவுவதற்கென முதலில் கண் வங்கி தொடங்குவதற்கு அரசின் அனுமதியைக் கோரியுள்ளது அம்மாநில கத்தோலிக்க மறைமாவட்டம். ஜம்மு-காஷ்மீர் மாநில நலவாழ்வு மையத்திற்கு அனுமதி கேட்டு விண்ணப்பித்துள்ளது குறித்து தெரிவித்த ஜம்மு-காஷ்மீர் மறைமாவட்ட நலப்பணி மைய இயக்குநர் அருள்பணி Shaiju Chacko அவர்கள் தேவையான அனுமதி விரைவில் கிடைக்கும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்தார். முஸ்லீம்கள் பெரும்பான்மையாக வாழும் ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் கத்தோலிக்கர் சிறுபான்மையினராக இருந்தாலும் இனம், மதம் என்ற வேறுபாடின்றி துன்புறும் மக்களுக்கு உதவுவதற்கே திருஅவை முன்னுரிமை கொடுக்கின்றது என்று அருள்பணி Chacko அவர்கள் மேலும் கூறினார். அண்மையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஏறக்குறைய 800 பேரின் கண்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் ஏறக்குறைய 250 பேர் கண்பார்வை இழந்துள்ளனர் என்றும் மருத்துவர்கள் கூறுகின்றனர் ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் அண்மையில் இடம்பெற்ற வன்முறையில் ஏறத்தாழ 11,000 பேர் காயமடைந்துள்ளனர். மற்றும் குறைந்தது 80பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

6. ஆணவக் கொலை குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்கும் புதிய சட்டத்தை பாகிஸ்தான் நாடாளுமன்றம் அங்கீகரித்துள்ளதை அந்நாட்டு கிறிஸ்தவ மற்றும் முஸ்லீம் மனித உரிமை ஆர்வலர்கள் வரவேற்றுள்ளனர். குடும்பத்திற்கு கெட்ட பெயர் என்று சொல்லி பாகிஸ்தானில் ஆண்கள் பெண்களை கொலை செய்வது பரவலாக இடம்பெற்று வந்தது. ஆயினும் தற்போதைய புதிய சட்டத்தின்படி கொலை செய்யப்பட்டவரின் குடும்பம் மன்னிப்பு கொடுத்தாலும் குற்றவாளிக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்படும். பாகிஸ்தானின் பஞ்சாப் மாநிலத்தில் மட்டும் இவ்வாண்டின முதல் ஏழு மாதங்களில் 94 ஆணவக் கொலைகள் இடம்பெற்றுள்ளன என்று ஆசிய செய்தி நிறுவனம் கூறுகிறது.

## சுடர் வாசகர் போட்டி 28 முடிவுகள்

1. புரோடஸ்டன்ட் சபை துவங்கிய 500ஆம் ஆண்டு துவக்க விழாவில் கலந்துக் கொள்ள
2. தூய பிரான்சிஸ் அசிசியார்
3. சிலுவை யோவான்
4. தூய அந்தியோக்கு இஞ்ஞாசியார்
5. தூய அவிலா தெரேசாள்
6. 13ஆம் கிரகோரியார்
7. தமியோன் ஆலயத்தில்
8. குழந்தை இயேசுவின் தூய தெரேசாள்

9. எங்கெல்லாம் உழைக்கும் மக்களை (ஓட்டுநர்கள், சிறு வியாபாரிகள், கடைகளில் பணிபுரிவோர்) சந்திக்கின்றோமோ அவர்களோடு மரியாதையோடும், மாண்போடும், அன்போடும் உரையாட முடிவெடுப்போம்
10. திருத்தந்தை 23ஆம் யோவான்
11. லூக்கா நற்செய்தி
12. நற்செய்தி அறிவிப்பது
13. மனநிலை, எண்ணங்கள், ஆலோசனைகள், சிந்தனைகள், நன்றியுணர்வு, மகிழ்ச்சி
14. தூய பிரான்சிஸ் அசிசியார்
15. தூய பவுல் திமொத்தேயுவிடம் கூறியது

**வெற்றி பெற்றவர்களுக்கான பரிசு**

1. திருமதி. ஜெயந்தி பெர்ணான்டோ, சென்னை.
2. திரு. அந்தோணிசாமி, சூரமங்கலம், சேலம்.
3. திரு. பிரான்சிஸ் அலோசியஸ், சென்னை.

## சுடர் வாசகர் போட்டி - 28

1. "எப்பொழுதும் கடவுளின் பிரசன்னத்தில் வாழ முயற்சி செய்யுங்கள்" கூறியது யார்?
2. "பிள்ளைகள் ஆண்டவர் அருளும் செல்வம், மக்கட்பேறு அவர் அளிக்கும் பரிசு" இந்த இறைவார்த்தை விவிலியத்தில் எங்குள்ளது?
3. 1854ஆம் ஆண்டு தூய பவுல் பேராலயத்தை புனிதப்படுத்தி அர்ப்பணித்த திருத்தந்தை யார்?
4. கிறிஸ்துவின் அரசு எத்தனை கூறுகளை கொண்டது? அது எது என்று ஆசிரியர் கூறுகிறார்?
5. தூய செசிலியம்மாள் யாருடைய பாதுகாவலி?
6. இந்த ஆண்டு நவம்பர் 19ல் கர்தினால் நிலைக்கு எத்தனை பேர் ஆசியா கண்டத்திலிருந்து உயர்த்தப்பட உள்ளனர்?
7. இந்த மாதத்திற்கான இரக்கச் செயலாக ஆசிரியர் எதை கூறுகின்றார்?
8. ஆயர்களுக்கு ஆசிரியர் என அழைக்கப்பட்டவர் யார்?
9. இறையாட்சி மத்தியில் செயல்படுகிறது என்பதன் பொருள் என்ன?
10. தூய ஆல்பர்ட் "ஊமை மாடு" பேசும் சத்தம் உலகமெங்கும் கேட்கும் என்று யாரை முன்குறித்து கூறினார்?
11. எந்த விழாவுடன் கத்தோலிக்க திருவழிபாட்டு ஆண்டு நிறைவடைகின்றது?
12. கிறிஸ்து அரசர் பெருவிழா பொதுக்காலத்தின் கடைசி ஞாயிறு அன்று சிறப்பிக்கப்பட வேண்டுமென்று அறிவித்தவர் யார்?
13. "பலியை அல்ல இரக்கத்தையே விரும்புகிறேன்" திருவிவிலியத்தில் எந்தப் பகுதியில் உள்ளது?
14. 2018ஆம் ஆண்டு நடக்க இருக்கும் ஆயர்களின் 15வது மாமன்றத்தின் மையக்கருத்து என்ன?
15. "ஆண்டவர் வழியை ஆயத்தமாக்குங்கள், அவர் பாதையை செம்மையாக்குங்கள்" கூறியது யார்?

### அடுத்த சுடரில்
### பகுதி 2

1. தூய பிரான்சிஸ்
2. தூய அம்புரோஸ்
3. மரியன்னையின் அமலோற்பவம் - பெருவிழா
4. தூய குவாதெலூப் அன்னை
5. தூய லூசியா
6. தூய திருச்சிலுவை யோவான்
7. திருவருகைக் காலத்தின் ஞாயிறுகள்
8. கிறிஸ்து பிறப்பு பெருவிழா
9. தூய ஸ்தேவான்
10. தூய யோவான்

11. மாசில்லா குழந்தைகள்
12. தூய தாமஸ் பெக்கட்
13. திருக்குடும்ப திருவிழா

பகுதி 2

1. கிறிஸ்து பிறப்பும் இன்றைய சூழலும்
2. கிறிஸ்துமஸ் தாத்தா - வரலாறும் பொருளும்
3. குவாதெலூப் அன்னை - புதுமைகள்
4. திருக்குடும்ப திருவிழா தரும் பாடங்கள்
5. திருச்சபை செய்திகள்

# 2016 நவம்பர் மாதத்திற்கான திருப்பலி வாசகங்கள்

| தேதி | கிழமை | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 1 | செவ்வாய் | புனிதர் அனைவர் பெருவிழா | Iதி.வெ.7:2-4,9-14<br>II 1யோவா.3:1-3 | மத்5:1-12அ |
| 2 | புதன் | இறந்த விசுவாசிகள் அனைவரின் நினைவு | பொது வாசகங்கள் | பொது வாசகங்கள் |
| 3 | வியாழன் | புனித மார்டின் தெ போரஸ் | பிலி.3:3-8 | லூக்.15:1-10 |
| 4 | வெள்ளி | புனித சார்லஸ் பொரோமெயோ | பிலி.3:17-4:1 | லூக்.16:1-8 |
| 5 | சனி | | பிலி.4:10-19 | லூக்.16:9-15 |
| 6 | ஞாயிறு | ஆண்டின் 32-ம் ஞாயிறு | I 2மக்.7:1-2,9-14<br>II 2தெச2:16-3:5 | லூக்.20:27-38 |
| 7 | திங்கள் | | தீத்து.1:1-9 | லூக்.17:1-6 |
| 8 | செவ்வாய் | | தீத்து.2:1-8,11-14 | லூக்.17:7-10 |
| 9 | புதன் | இலாத்தரன் பேராலய நேர்ந்தளிப்பு | I செக்47:1-2:8,9,12<br>II 1கொரி3:9ஆ-11,16இ17 | யோவா2:13-22 |
| 10 | வியாழன் | புனித பெரிய லியோ | பில.7-20 | லூக்.17:20-25 |
| 11 | வெள்ளி | | 2யோவான்.4-9 | லூக்.17:26-37 |
| 12 | சனி | | 3யோவான்5-8 | லூக்.18:1-8 |
| 13 | ஞாயிறு | ஆண்டின் 33-ம் ஞாயிறு | Iமலா.4:1-2அ<br>II 2தெச3:7-12 | லூக்.21:5-19 |
| 14 | திங்கள் | | தி.வெ.1:1-4,2:1-5அ | லூக்.18:35-43 |
| 15 | செவ்வாய் | புனித பெரிய ஆல்பர்ட் | தி.வெ.3:1-6,14-22 | லூக்.19:1-10 |
| 16 | புதன் | | தி.வெ.4:1-11 | லூக்.19:11-28 |
| 17 | வியாழன் | அங்கேரி புனித எலிசபெத் | தி.வெ.5:1-10 | லூக்.19:41-44 |
| 18 | வெள்ளி | திருத்தூதர்கள் பேதுரு, பவுல் பேராலயங்கள் நேர்ந்தளிப்பு | திப28:11-16,30-31 | மத்.14:22-33 |
| 19 | சனி | | திவெ.11:4-12 | லூக்.20:27-40 |
| 20 | ஞாயிறு | கிறிஸ்து அரசர் பெருவிழா | I 2சாமு.5:1-3<br>II கொலோ.1:12-20 | லூக்.23:35-43 |
| 21 | திங்கள் | தூய கன்னி மரியாவைக் காணிக்கையாக அர்ப்பணித்தல் | செக்2:10-13 | மத்.12:46-50 |
| 22 | செவ்வாய் | புனித செசிலியா | தி.வெ.14:14-20 | லூக்.21:5-11 |
| 23 | புதன் | | தி.வெ.15:1-4 | லூக்.21:12-19 |
| 24 | வியாழன் | | தி.வெ.18:1,2:21-23:19: 1-3.9அ | லூக்.21:20-28 |
| 25 | வெள்ளி | புனித கேத்தரின் | தி.வெ.20:1-4,11-21:2 | லூக்.21:34-36 |
| 26 | சனி | | தி.வெ.22:1-7 | லூக்.21:34-36 |
| 27 | ஞாயிறு | திருவருகைக் கால முதல் ஞாயிறு | I எசா4:2-6<br>II உரோ.13:11-14 | மத்24:37-44 |
| 28 | திங்கள் | | எசா.4:2-6 | மத்.8:5-11 |
| 29 | செவ்வாய் | | எசா.11:1-10 | லூக்.10:21-24 |
| 30 | புதன் | புனித அந்திரேயா - திருத்தூதர் | உரோ.10:9-18 | மத்4:18-22 |